Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | கார்த்திகை 20 | 6 - 12 - 94 | செவ்வாய்க்கிழமை | ஓசை 291

## வவுனியா தமிழீழ நீதிமன்று நேற்றுக் காலை திறந்துவைப்பு

வவுனியா மாவட்டத்திற்கான தமிழீழ நீதிமன்றம் நேற்றுக் காலை 10 மணிக்கு கனகராயன்குளத்தில் திறந்து வைக்கப்பட்டது. தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் - தமிழீழ காவற்துறை துணைப் பொறுப்பாளர் ரமேஸ் தேசியக்கொடியை ஏற்றிவைத்தார். நீதிமன்றப் பெயர்ப் பலகையை வன்னி மாவட்டத் தளபதி சூட்டி திரைநீக்கம் செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கை - கிளிநொச்சி கோட்டப் பொறுப்பாளர் இலக்கியனும் வன்னிப் பகுதி செஞ்சோலைப் பொறுப்பாளர் யூடியும் ஏற்றி வைத்தனர். நீதிமன்ற கட்டடத்தை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் திறந்துவைத்தார். நிகழ்வின் சிறப்புரைகளை நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கரிகாலன் (6-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு மட்டு. வாவியில் ஆறு பயணிகள் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாவியைப் படகு ஒன்றின் மூலம் கடக்க முற்பட்டவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஆறு தமிழர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக இராணுவம் கூறியுள்ளது. எனினும்இவ்வாறுஉயிர் இழந்தவர்கள் அப்பாவிகளான கிராமவாசிகள் எனவும் மீனவர்கள் எனவும் உள்ளூர்வாசிகள் கூறியுள்ளனர்.

## இன்று படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## பல இராணுவ உயர் அதிகாரிகள் அரசிற்கு எதிரான உணர்வில் உள்ளனர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ உயர் அதிகாரிகள் பலர் பொ,ஐ. முன்னணி அரசிற்கு எதிரான உணர்வுகளை உடையவர்களாக உள்ளனர்.

இதனால் அரசியல் நகர்வுகள் தொடர்பாக இராணுவத்தினரை திருப்திப்படுத்துவதற்கு கூடியளவு நேரத்தை பொ. ஐ. முன்னணி செலவழித்துவருகிறது என கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல் மூலம் தெரியவருகிறது.

இவ்வாறான நிலை கடற்படையிலோ விமானப்படையிலோ இல்லை என தெரியவ (6-ம் பக்கம் பார்க்க)

# தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு உருவாக மோதல் அற்ற நிலை நீடிப்பது உதவுமாம்!

## உள்ளூராட்சித் தேர்தல் மார்ச்சில் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதத்தில் உள்ளூராட்சித்தேர்தலை நடத்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இத்தேர்தல் மூலம் 300 உள்ளூராட்சி சபைகளை கைப்பற்ற முடியும் என பொதுஜன ஐக்கிய முன்னணி கருதுகின்றது.

கடந்த பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த பெருவெற்றியைத் தொடர்ந்து இத்தேர்தலையும் நடத்த அரசு திட்டமிடுவதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போது 80 சதவீதமான உள்ளூராட்சி சபைகள் ஐ.தே. க. வசமே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யுத்தத் தீயின் மத்தியில் சமாதானப் பேச்சுக்களா?

## அரசதரப்பு விரும்புவதாக சண்டேரைம்ஸ்

(கொழும்பு)

தாக்குதல்கள் இல்லாத நிலை தொடர்ந்தும் நீடிப்பது - தாக்குதல்களைத் தவிர்ப்பது தொடர்பான ஓர் உடன்பாட்டுக்கு இட்டுச் செல்லக் கூடும். தாக்குதல் தவிர்ப்பு உடன்பாடு ஒன்று ஏற்படுவதற்கு இது முதற்படியாக அமையும் என அரசாங்கம் கருதுகின்றது. அவ்வாறான உடன்பாடு ஏற்படும் பட்சத்தில் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயம் போன்ற நிறுவனங்களால் இது கண்காணிக்கப்பட வேண்டும். இவ்வாறு அரசாங்கம் கருதுவதாக "சண்டே ரைம்ஸ்"சின் பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், எனினும் இது போர் நிறுத்தம் அல்ல என்றும், ஒரு தரப்பு மற்ற தரப்பினரின் முகாம்கள், ரோந்துஅணிகள், மீதான தாக்குதல்களை தவிர்ப்பதே இதன் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், பதுங்குகுழிகள் அமைப்பது, எதிரி முனைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஏதுவாக படையினரை ஆயத்தப்படுத்துவது, புலனாய்வு வேலைகளை தொடருவது போன்றவற்றைக்கட்டுப்படுத்தாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய உடன்பாடு தொடர்பாக திட்டவட்டமான திகதிகள் எதுவும் தீர் ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## தபால் பொதிகள் வந்தன

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நேற்று காலை வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் யாழ். மாவட்ட தபாலகங்களுக்கு 185 தபால் பொதிகள் வந்துள்ளன. தபால் பொதிகள் அனைத்தும் உடனேயே கப்பலில் இருந்து இறக்கப்பட்டன. (யோ)

## தலைமையகத்தில் இருந்த பிரிகேடியர்களுக்கே ஓய்வு

மீதான தாக்குதல்களை தவிர்ப்பதே இதன் நோக்கம்

ஆயத்தப்படுத்துவது, புலனாய்வு வேலைகளை தொட

மான திகதிகள் எதுவும் தீர்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## சமாதானப் பேச்சுக்களா?

### பேரினவாதப் பத்திரிகையின் கேள்வி

[கொழும்பு]

வடக்கே யுத்தத் தீ தெற்கே பசித் தீ இதற்கு மத்தியில் சமாதான பேச்சு வார்த்தையா? இவ்வாறு ''திவுலே'' என்னும் சிங்களப் பத்திரிகை தனதுதலைப்புச் செய்தியில் தெரிவித்துள்ளது.

வடக்கின் யுத்தத்தில் சிங்கள இளைஞர்கள் இறக்கின்றார்கள். தெற்கில் சிங்கள மக்கள் பட்டினியால் இறக்கின்றார்கள் இந்த நிலையில் பொ.ஐ.முன்னணி என்ன செய்யப் போகின்றது.?

சிங்களவர்களைக் காப்பாற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி தொடர்ந்தும் தவறிழைத்து வருவதாக அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 350 சோடி தற்காப்பு கவசம் பாது·அமைச்சு கொள்வனவு

### அமெரிக்கத் தயாரிப்புக்களாம்

(கொழும்பு)

ஒவ்வொன்றும் தனித்தனியே சுமார் 43,000 ரூபா பெறுமதியுடைய தற்காப்பு கவசங்களில் 350 சோடி பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய தற்காப்பு

(6-ம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் திடீர்மோதல் இரு புலிகள் வீரச்சாவு

மணலாற்றுப் பிரதேசத்தில் கடந்த 3-ந் திகதி இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத திடீர் மோதலில் இரண்டு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட,

(6ஆம் பக்கம் பார்க்க)



கப்டன் துரையரசன் நகுலன்



லெப். திலகன்

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சருக்கு கொமாண்டோக்கள் பாதுகாப்பு

(கொழும்பு)

பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான கேணல் அநுருத்த ரத்வத்தையின்உயிருக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அவரின் பாதுகாப்பு அதிரடிப்படையின் சீருடை அணிந்தபல கொமாண்டோக்களை கொண்டதாக பலப்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்களை அவர் சந்திக்கும் ஒவ்வொரு தடவையும் அவரைச் சுற்றி மனிதவேலி ஒன்றையே பாதுகாப்பு படையினர் அமைத்து விடுவதாக தெரியவருகிறது. விருந்துகள் மற்றும் ராஜதந்திரிகளுடனான சந்திப்பு, உயர் அதிகாரிகளுடனான சந்திப்பு என்பவற்றின்போதும் இப் பாதுகாப்பு ஒழுங்கு கடைப்பிடிக்கப்படுகிறது.

## புதிய விமானக் கொள்வனவு ஆயுதத் தரகர்கள் அதிருப்தி

(கொழும்பு)

ரஷ்யத் தயாரிப்பான அன்டனோவ் போக்குவரத்து விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திகள் போன்றவற்றின் கொள்வனவு தொடர்பாக விமானப் படை விடுத்துள்ள கேள்வி அறிவித்தல் கொழும்பிலுள்ள ஆயுத வியாபாரிகள் மத்தியில் பலத்த பரபரப்பை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறு சண்டே டைம்ஸின் பாதுகாப்பு பகுப்பாய்வாளர் தமது கட்டுரைபொன்றில் குறிப்பிட்டுளார். அவர் மேலும் குறிப்பிடுகையில், இக் கேள்வி அறிவித்தல் மூலம் அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தமாக ஏற்படலாம் எனவும், இதில் கமிஷன் பெறும் மூன்றாம் தரப்பின் பங்களிப்பு தவிர்க்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இக் கேள்வி அறிவித்தல் தொடர்பாக அதிருப்திக்கு உள்ளாகியிருக்கும் உள்ளூர் ஆயுத விநியோக முகவர்கள் இதில் தரப்பட்டுள்ள கால அவகாசம் போதாது எனவும், கோரப்பட்ட விதத்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## தனது மாநிலங்களுக்கு மேற்பட்ட சுயாட்சியை இந்தியா விரும்பாது

### கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம்

(யாழ்ப்பாணம்)

இந்திய மாநிலங்களிற்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை விட கூடுதலான அதிகாரங்கள் இலங்கையில் வட கிழக்கு பகுதிக்கு கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் இந்தியாவின் தலையீடு உச்சக்கட்டத்தை அடையலாம் என கொழும்பில் உள்ள அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் நடந்து கொள்ளும் விதத்தை தற்பொழுது இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

வடகிழக்கிற்கு எவ்வளவு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை விட இந்தியா தனது நலனிலேயே கூடிய அக்கறையாக உள்ளது.

வடகிழக்கு பகுதிக்கு எவ்வளவிற்கு குறைவான அதிகாரங்கள் வழங்க முடியுமோ அவ்வளவிற்கு இந்தியாவின் நலன்கள் பாதுகாக்கப்படும் என இந்தியா கருதுகிறது.

ஆதலால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை சமாதான வழியில் கிடைக்கப் பெறுவதில் இந்தியாவின் குறுக்கீடும் அதிகமாக காணப்படலாம் எனவும் மேலும் தெரிவிக்கின்றனர். (இ), (பா)

## பிரிகேடியர்களுக்கே ஓய்வு

(கொழும்பு)

சிறிலங்கா அரசினால் கட்டாய ஓய்வில் செல்லும்படி பணிக்கப்பட்டவர்களில் நான்கு பிரிகேடியர்களும் இராணுவ தலைமையகத்தில் பணிபுரிபவர்கள் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பிரிகேடியர் பி.ஜே.வி பெரேரா பிரிகேடியர் கே.வி. எல்வடா ஆகியோர் பாதுகாப்பு அமைச்சிலும், பிரிகேடியர் எச்.எப். ரூபசிங்க, இராணுவ சட்டப் பிரிவின் இயக்குநராகவும், பிரிகேடியர் எச்.ஐ.கே. பெர்னாண்டோ இராணுவ புனர்வாழ்வு பிரிவின் இயக்குநராகவும் கடமையாற்றி வந்துள்ளனர்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

வடக்கில் கள்ளவாக்குகள்

## இராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலின்போது, யாழ். மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வாக்களிப்பு நடத்தப்பட்டதாகக்கூறி கள்ளவாக்குகளை வாக்குப் பெட்டிகளில் நிரப்புவதற்கு உதவி செய்ததாக கூறப்படும் பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றும் உயர் இராணுவஅதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக 'ராவய' செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் குப்

( 6 ஆம் பக்கம் பார்க்க ,

பூநகரிப்பாதை திறப்பு

## ஆயரின் கோரிக்கைக்கு அரசிடம்இருந்துபதிலில்லை

[யாழ்ப்பாணம்[

பாப்பரசரின் விஜயத்தில் கலந்து கொள்வதற்காக யாழ் மக்கள் செல்வதற்கு வசதியாக பூநகரி பாதையை திறப்பது பற்றி அரசாங்கத்துக்கு பல வழிகளில் வற்புறுத்தியும் -தகுந்த பதில் எதுவும் கிடைக்கவில்லை, இவ்வாறு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பூநகரிப்பாதை திறப்பினும் ராணுவம்விலகமாட்டாதாம்

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் தற்போது செயற்படும் பாதுகாப்பு அமைச்சு பூநகரி- சங்குப்பிட்டி பாதையை யாழ்ப்பாணத்திற்கான போக்குவரத்திற்காக திறப்பதற்கு இணங்கியுள்ளது.எனினும் பூநகரியில் இருக்கும் இராணுவ முகாம் மீளப்பெறப்பட மாட்டாது எனவும் தெரியவருகிறது. இவ்வாறு சண்டே டைம்ஸின் பாதுகாப்பு பகுப்பாய்வாளர் தமது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் ஆனையிறவுப் பாதையை திறப்பதுவேதமது நீண்ட கால விருப்பம் எனவும் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்


**டிராக்டர் விற்பனைக்குண்டு**

புதிய மசி- பெர்குஸன் (MF 240 Super) டிராக்டர் ஒன்று பெட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. சந்திரன் C/o என். தவராசா, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (10295)

**பசுமாடு காணவில்லை**

கறுத்த முகமும் இரு கொம்புகளும் வளைவான மண்ணிறத்தையும் 3½ அடி உயரத்தையுடைய பசுமாடு ஒன்று 21-11-94 முதல் காணவில்லை கண்டவர்கள் 33 கண்ணாபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். (10293)

**புதிய வகுப்புக்கள்**

ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களுக்குரிய புதிய வகுப்புகள் 05-12-94 திங்கள் பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகின. தமிழ், கணிதம் அம்பிகைபாகன். மாதாந்தப் பயிற்சிப் பரீட்சைகள் நடைபெறும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (10297)

**புலமைப் பரிசில் BRIGHT இன் புத்தகங்கள்!**

புலமைப்பரிசில் 5-ம் ஆண்டு கணிதம் ரூபா 60, தமிழ் ரூபா 50, கட்டுரை மஞ்சரி ரூபா 50, கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, தனலட்சுமி புத்தகசாலை, நாயகபாலன் புத்தகசாலை, சிவம் மெடிக்கல் புத்தகசாலை, மொடேண் புத்தகசாலை, ஆசீர்வாதம் புத்தகசாலை, (10308)


## நிழல் மரங்கள் நாட்டல்

(தொல்புரம்)

வலிமேற்கு, வலிதென்மேற்கு பிரதேசங்களின் அநேகமான இடங்களில் நிழல் மரங்கள்நாட்டப்பட்டுள்ளன நடுகை செய்யப்பட்ட மேற்படி மரக்கன்றுகளுக்கு கூடமைத்து சில இடங்களில் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளன. இவைகளை அந்தந்தப் பகுதி பிரதேசசபையினரும்,

# வடக்கே செல்லும் படையினருக்கு போதிய பயிற்சியின்மை இழப்பாகிறது

### காயமுற்ற இராணுவ சார்ஜண்ட் கூறுகிறார்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் படையினருக்கு போதிய பயிற்சி வழங்கப்படாமையே அங்கு அவர்கள் அதிகளவில் கொல்லப்படுவதற்கும் காயமடைவதற்கும் காரணமாகும் என இராணுவ சார்ஜன்ட் எச். கே. தயாரட்ண கருத்து தெரிவித்துள்ளார்.

1985 இல் விடுதலைப்புலிகள் அநுராதபுரத்தில் நடத்திய திடீர்தாக்குதல் ஒன்றில் ஒரு காலை இழந்த இவர் தற்போது காயமுற்ற முன்னாள் படையினருக்கான சங்கம் ஒன்றை ஆரம்பித்து நடத்தி வருகிறார்.

யாழ்ப்பாணம் செல்லும் படையினர் பலருக்கு வடபகுதி தரையமைப்பு குறித்து தெளிவான அறிவு இருப்பதில்லை. அங்கு போரிட தயாராகாத நிலையில் பல இளைஞர்கள் அனுப்பப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மின்வேலியில் சிக்கி காட்டுயானைகள் பலி

(கொழும்பு)

மின்சாரவேலியில் மோதி மூன்று காட்டுயானைகள் உயிரிழந்துள்ளன. இச் சம்பவம் கடந்த வாரம் கிழக்கில் புனானைப் பகுதியில் இடம் பெற்றது.

மகாவலி விவசாய பிரதேசத்தில் பண்ணையொன்றை சுற்றி மின்வேலி போடப்பட்டிருந்தது. காட்டுயானைகள் ஊடுருவுவதை தடுக்கவே இவ்வாறு மின்வேலி போடப்பட்டிருந்தது.

### யாழ். பல்கலைக்கழகத்தின்

# கட்டட நிர்மாணத்திற்கு மானியக் குழு நிதியுதவி?

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் கட்டி குறையாக இருக்கும் கட்டடங்களில் ஒரு பகுதியை கட்டிமுடிப்பதற்கு பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக் குழு ஒரு தொகுதி நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் யாழ். பல்கலைக் கழகத்தின் கட்டட தேவையை நிறைவு செய்யவென கட்டப்பட்ட கட்டடங்கள் நாட்டின் சூழ்நிலை காரணமாக தொடர முடியாததினால் குறையாக விடப்பட்டிருந்தன.

இவற்றை கட்டி முடித்து கட்டட தேவையைப் பூர்த்தி செய்வதற்காக யாழ். பல்கலைக்கழகத்தினால்எடுத்துக் கொண்டமுயற்சியை அடுத்து அதற்கு 500 மில்லியன் ரூபா தேவைப்பட்டது.

இதில் சுமார் 350 மில்லியன் ரூபா பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக் குழுவினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத் திருத்த வேலைகளிற்கான மூலப்பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இக் கட்டடங்கள் முழுமையாக கட்டிமுடிக்கப்படும் பட்சத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் ஓலையினால் வேயப்பட்ட மண்டபங்களில் நடைபெற்றுவரும் விரிவுரைகள் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு விடும் என நம்பப்படுகிறது.

(இ) (பா)

# நீதித்துறைக்கு அதிகாரம்

(கொழும்பு)

பாராளுமன்றம் தொடர்பான மனித உரிமை மீறல் தொடர்பாக விசாரிக்க நீதித்துறைக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கென அரசியல் யாப்பில் திருத்தம் செய்யப்படவுள்ளது என நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.


## யாழ் வணிகர் கழகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

எமது கழக எல்லைக்குட்பட்ட சகல வணிக நிலையங்களுக்கும் எமது கழகத்தால் தரப்பட்ட ''வணிக நிலையத்தின் விபரம்'' - 3 பத்திரங்களையும் எதிர்வரும் 08-12-94 வியாழக்கிழமைக்கு முன்பதாக பூர்த்தி செய்து கழகப் பணிமனையில் ஒப்படைக்குமாறு கழகத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம். இக் குறிப்பிட்ட திகதிக்குள் தரத் தவறுவோருக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதையும் அன்புடன் அறியத்தருகிறோம்.

- யாழ் வணிகர் கழகம்

(சி-10848)

## பொதுமக்கள் அனைவருக்கும் யாழ் வணிகர் கழகம் விடுக்கும் ஓர் அன்பான வேண்டுகோள்

உங்கள் தங்க ஆபரணங்களை நகை வணிகர் நிலையத்திற்கு விற்க வரும்போது தவறாமல் உங்கள் அடையாள அட்டையை அல்லது குடும்ப அட்டையை கொண்டு வரும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி, வணக்கம்.

யாழ் வணிகர் கழகம்,
யாழ்ப்பாணம்.

(சி-10849)


## நினைவு கூருகின்றோம்...

### 06.12.1994

1988-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ்-கரவெட்டி, தச்சன்தோப்பில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.சுருளி** (முருகன் சிவராசா-காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு-யாழ்)

1989-ம் ஆண்டு பழுகாமம் பகுதியில் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் றொபேட்** (சங்கரப்பிள்ளை கருணாகரன்-காரைதீவு-02-அம்பாறை)

**கோல்ட்** (கணபதி ரவி-பாண்டிருப்பு, கல்முனை-அம்பாறை)

**வேணு** (குஞ்சுத்தம்பி தயாளன்-கொம்மாந்துறை, செங்கலடி-மட்டு)

**சியாத்** (மீராசாகிபு காலிதீன்-552, சாய்ந்தமருது-அம்பாறை)

**யசோ** (செல்லையா தங்கராசா-தம்பிலுவில் - அம்பாறை)

**அஸ்வர்** (ஜபார் ஜாமீர் - அட்டாளைச்சேனை-அம்பாறை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப்படையினரால் கொல்லப்பட்டதமிழ்ப் பொதுமக்கள்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10843)

## 31-ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
22 - 12 - 1916

மறைவு
06 - 11 - 1994

**உயர்திரு.வேலுப்பிள்ளைகந்தையா**
ஆசிரியர்
(ஓட்டு வெளி)

இளைப்பாறிய அதிபரும், இணக்கசபைத் தலைவ

உ.
சிவமயம்

## 1-ம்ஆண்டுநினைவலைகள்



பகுதி பிரதேசசபையினரும், பிரதேச செயலகமும் முன்னின்று இந்த நடவடிக்கைகளை கவனித்து வருகின்றன. பொது ஸ்தாபனங்கள் ஊடாக வழங்கப்பட்ட மரக் கன்றுகளையும் காணக் கூடியதாகவுள்ளது. இவற்றை பேணிக்காத்து வளர்ப்பதில் சனசமூக நிலையங்கள் போன்ற பொதுப்பணி மன்றங்கள் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது (41)

## கூரே கோரிக்கை

(கொழும்பு)

ஐ.தே கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கட்சியினர் முழு ஆதரவு வழங்க வேண்டும் என சிறிசேன கூரே அழைப்பு விடுத்துள்ளார்.

(ஒட்டு வெளி)

இளைப்பாறிய அதிபரும், இணக்கசபைத் தலைவரும், சமாதான நீதிபதியும், பல்கலை வல்லுனருமாக இருந்து பெற்ற,


பதவிகள் எத்தனை பட்டங்கள் எத்தனை,
பாமாலை, பூமாலை, புகழ்மாலை எத்தனை!
எத்தனை !!
அத்தனையும் பாரெல்லாம் நின்புகழைப் பரப்பி நிற்குதையா.
இத்தனையும் இருந்தென்ன எம்கண்கள் கண்ணீரை வடிக்குதையா.

ஆறாது ஆறாது எம்துயரம்
நீங்காது நீங்காது உம் நினைவு.

அன்னாரின் துயரச் செய்தி கேட்டு, மரணச் சடங்கிற் பங்கு பற்றிய, அனுதாபச் செய்தி அனுப்பிய, கண்ணீர் அஞ்சலி வெளியிட்ட, உடன் நின்று உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இன்றைய (6-12-94 செவ்வாய்க்கிழமை) வீட்டுக் கிருத்தியம், அந்தியேட்டிகளிற் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
''கந்தமாதனம்'' பூட்டப்பிள்ளைகள்
மிருசுவில். (10304)


வெலிங்டன் சந்திக்கருகில்!



UNIKCO

COMPUTER CENTRE

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

வார நாள் வகுப்புகள் - 9 - 12 - 94
வார இறுதி வகுப்புகள் - 10 - 12 - 94

குறிப்பு: குறித்த அளவு மாணவர்கட்கு மட்டுமே அனுமதி உண்டு.
மேலதிக விபரங்கட்கு:

37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(சி-10846)


'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அத்திவாரமாக அமைந்த பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும் சைவப் பெருவள்ளலாருமாகிய

சேர் பொன். இராமநாதன்
அவர்களின்

# நினைவு தின விழா
## புதன்கிழமை (7-12-1994)

### காலை நிகழ்வுகள்

**ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்**

காலை 5-8 மணிவரை அஷ்டோத்திர சத (108) சங்காபிஷேகம்

**சபாமண்டபம் (Board Room)**

காலை 9 மணி -- சைவப்பெருவள்ளலாரின் உருவப் படத்திற்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் அவர்கள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செய்வார்.

வேதபாராயணம் -- திருமுறை ஓதல் (சேர் பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவன குருகுலச் சிறார்கள்)

### மாலை நிகழ்வுகள்

இடம்: கைலாசபதி கலை அரங்கம் பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினர்:
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்.

சிறப்பு விருந்தினர்:
**திருமதி ஆ. சிவஞானசுந்தரம்,**
அதிபர், இராமநாதன் கல்லூரி.

### விசேட நிகழ்வுகள்

இசையரங்கம்:
**இசைக்கலைமணி திரு. வர்ண - இராமேஸ்வரன்**

நடன நிகழ்ச்சி:
**இராமநாதன் கல்லூரி மாணவிகள்**

இந்நிகழ்வுகளில் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
5-12-1994.

இந்துமன்றம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(சி-10847)



## திருநாவுக்கரசு ஜோன் அருட்செல்வன்

[யாழ்ப்பாணக்கல்லூரி உயர்தர வகுப்புமாணவன்]

மண்ணுலகில்: 11.01.1974
விண்ணுலகில்: 06.12.1993

'மண்ணுலகில் என்னை நேசித்தவர்களே
என் இறப்பின் பின்னும் என்னை நேசியுங்கள்'
எனச் சொல்லிச் சென்ற செல்வனே!
இன்றுடன் ஓராண்டு சென்றாலும்- உன்னை
தினம் எம் நெஞ்சங்களில் நேசிக்கின்றோம்
உன் இளமைத் தோற்றம் கண்டு - நாம்
பூரித்த வேளையில்
இறைவன் உன் இதயம் துடிப்பதை
மறுத்ததேனைய்யா? - எம்மை நீ
மறுதலிக்க வைப்பதற்காகவா?
எமை துடிதுடிக்க வைக்கவா?
மண்ணுலகில் தவழ்ந்த - உன் வாசனை
தினம் எம்மை சிந்திக்க வைக்கின்றது.
செல்வனே நீ இறைவன் சிங்காசனத்தருகில்
புன்னகையுடன் தூங்கு செல்வமே,
உன் ஆத்துமா சாந்திபெற நாம் இறைவனைத்
தினம் இரந்து நிற்கின்றோம்.

உன் நினைவால் துயருறும்,
அப்பா, அம்மா, அக்காமார்.
தங்கைமார்களுடன் உறவினர்கள்.

(10303)

யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்.



# கடற்படை தலைமையக பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள சிறிலங்கா கடற்படை தளத்தினுள் வெளியார் செல்வதற்கு தற்போது மீண்டும் சட்டுப்பாடுகள் போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடற்படை தலைமையகத்திற்குள் பிரவேசிக்க அனுமதிப் பத்திரம் பெற்றிருந்த 13 தனியார்வாகனங்களின் அனுமதிப் பத்திரங்கள் தற்போது தலைமையகத்தால் மீளப் பெறப் பட்டுவிட்டதுடன் வெளிவாகனங்களோ ஆட்களோ கடற்படை தலைமையகத்தினுள் நுழைவதில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

கடற்படை தலைமையகம் விடுதலைப்புலிகளினால் தாக்கப்படலாம் என அண்மையில் வெளியான தகவல்களை தொடர்ந்தே மேற்படி தலைமையக பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது,

# சமாதானத்திற்காகவே நான் எப்பொழுதும் நிற்பேன்

-- டி மெல்

(கொழும்பு)

ரொனியின் சமாதான விருப்பம் ஐ.தே.கவின் சார்பிலானது

'நான் சமாதானத்தையே விரும்புகிறேன். நான் எப்போதும் அதற்காகவே நிற்பேன். ஆனால் நான் இதை எனது கட்சியின் சார்பில் சொல்லவில்லை'. இவ்வாறு ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் நிதி அமைச்சருமான ரொனி டி மெல் கூறியுள்ளார்.

ஆங்கில பத்திரிகையொன்றுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் சமாதானத்திற்காக எனது கழுத்துப் பறிபோக இருந்தது. நான் நான்கு முறை சுடப்பட்டேன். எனது வீடு அழிக்கப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கம் சமாதான முயற்சிகளில் வெற்றிபெற வேண்டும். அதற்காகநான் வாழ்த்துகிறேன் எனவும் தெரிவித்தார். மேலும் அரசியல் உறுதிக்கும் அபிவிருத்திக்கும் சமாதானமே அவசியம் வடக்கு-கிழக்கு யுத்தம் நடைபெறும் வரை முதலீட்டாளர்கள் நீண்ட காலத்திற்கு தொழில் முயற்சிகளில் ஈடுபடமாட்டார்கள் எனவும் குறிப்பிட்டார்.

# கடந்தகால தவறுகளை மீண்டும் விடமாட்டோம்

-பிரதமர் சிறிமாவோ

(கொழும்பு)

கடந்த காலத்தவறுகளை மீண்டும் நாம் செய்யமாட்டோம் என பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா உறுதியளித்துள்ளார். 1977 இல் நடைபெற்ற தேர்தலில் எமது தோல்விக்கு நாம்விட்ட தவறுகளேகாரணம் என்பதை உணர்ந்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொது வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், கடந்தகால தவறுகளே எமது வீழ்ச்சிக்கு காரணம் என்பதை இப்போது உணர்ந்துள்ளோம். இதே தவறுகளை மீண்டும் செய்யாமலிருக்க மிகுந்த கவனம் செலுத்துவோம் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# ஓய்வூதியத் திகதிகள் திணைக்களத்தால் அறிவிப்பு

(கொழும்பு)

1995 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் பற்றி ஓய்வூதியப் பணிப்பாளர் திரு ஆர். டபிள்யு. பியசேன ஓய்வூதியம் வழங்கும் திணைக்கள செயலாளர்களுக்கும், கணக்காளர்களுக்கும் ஓய்வூதியம் பெறும் சங்கங்களின் செயலாளர்களுக்கும் என்வி/எப்ஏ/கொடுப்பனவு என்ற சுற்று நிருபத்தின் மூலம் தெரிவித்துள்ளார்

இதன்படி சிறிலங்காவில் அடுத்த ஆண்டின் பன்னிரெண்டு மாதங்களிலும் ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் பின்வருமாறு:

ஜனவரி 10ஆம் திகதி, பெப்ரவரி 09ஆம் திகதி, மார்ச் 09 ஆம் திகதி, ஏப்ரல் 06ஆம் திகதி, மே 04ஆம் திகதி, ஜூன் 08ஆம் திகதி, ஜூலை 06ஆம் திகதி, ஆகஸ்ட் 08ஆம் திகதி, செப்ரெம்பர் 12ஆம் திகதி, ஒக்டோபர் 10ஆம் திகதி, நவம்பர் 09ஆம் திகதி, டிசம்பர் 07ஆம் திகதி.

# பரீட்சகர் நியமனம்

(தொல்புரம்)

யாழ் மாவட்டத்திற்கு இரண்டு பிரதம பரீட்சகர்கள் நியமிக்சப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. தொலைக்கல்வித்துறை மூலம் ஆசிரியப் பயிற்சிபெறும் பயிலுநர்களின் கல்விப் பிரயோக இறுதி மதிப்பீட்டு வேலைகளை மேற்கொள்வதற்கு இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் தெற்கு கல்வி வலயத்திற்கு யாழ். இந்துக்கல்லூரி தொலைக் கல்வி நிலைய சிரேஷ்ட போதனாசிரியர் திரு. எஸ். சரவணமுத்து அவர்களும், யாழ் வடக்கு கல்வி வலயத்திற்கு பருத்தித்துறை தொலைக் கல்வி நிலைய சிரேஷ்ட போதனாசிரியர் திரு. சித்திரவடிவேல் அவர்களும் பிரதம பரீட்சகர்களாக நியமனம் பெற்றுள்ளனர் என அறியவருகிறது. (41)

# கைப்பை கண்டெடுப்பு

பெண்கள் கைப்பை ஒன்று தாண்டிக்குளத்தில் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அளவெட்டி முகவரியுடனான பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை, வாழ்த்து அட்டை, ஒரு தொகுதி புகைப்படங்கள், கடிதங்கள் என்பவையும் இக்கைப்பையினுள் காணப்பட்டன. உரியவர்கள் அடையாளம் காட்டிப்பெறவும்.

# ரஷ்ய எம்.ஐ. உலங்குவானூர்தி என்ஜின் பாவனைக்கு பொருத்தமற்றது

## 'கியர்பொக்ஸ்' செயற்பாடும் குறைவாம்

## விமானப்படை குழு ரஷ்யா விரைகிறது

(கொழும்பு)

அண்மையில் ரஷ்யாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மூன்று உலங்கு வானூர்திகளில் பாரதூரமான தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளன என கொழும்பிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் சிறிலங்கா விமானப் படையின் நடவடிக்கைகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

இதனையடுத்து இந்த எம்.ஐ.ரக உலங்குவானூர்திகளை தயாரித்த ரஷ்யாவின் பல் தேசிய நிறுவனத்தாற் தருவிக்கப்படவிருக்கும் உதிரிப்பாகங்களின் தரம் பற்றி உத்தரவாதம் செய்யும் பொருட்டு குழுவொன்றை விமானப் படை ரஷ்யாவுக்கு அனுப்புள்ளது. நான்கு பேர்கொண்ட இக் குழுவிற்கு எயர் கொமடோர் எல்மோ பெரேரா தலைமை தாங்கி செல்கிறார்.

இந்த ரக உலங்குவானூர்திகளின் என்ஜின்கள் சிறிலங்காவில் பாவனைக்கு பொருத்தமற்றது எனவும் இதனுடைய 'கியர்பொக்ஸ்' ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே வேலைசெய்யும் எனவும் பாதுகாப்பு வட்டார பொறியியல் பிரிவினர் தரப்பில் கூறப்படுகின்றது.

இந்த உலங்கு வானூர்தி கொள்முதலை ஐ.தே.க அரசே மேற்கொண்டிருந்தது. புதிய அரசுபதவிக்கு வந்ததும் இந்த ஒப்பந்தத்தை ரத்துசெய்தது. எனினும் பின்னர் இந்த உலங்கு வானூர்திகளை கொள்முதல் செய்வது என புதிய அரசு முடிவு எடுத்தது தெரிந்ததே.

# பௌத்த-சிங்கள தீவிரவாதிகள் மீண்டும் இனவாதம் கக்குவதில் தீவிரமாயுள்ளனர்

## அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்



(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு சமாதானத் தீர்வில் ஆர்வம் இருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் தொடரும் என அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காமினி திசாநாயக்கா கொலை தொடர்பாக விடுதலைப்புலிகள் மீது குற்றஞ்சாட்டப்பட்டால் மீண்டும் பேச்சுகளை ஆரம்பிக்க நிபந்தனைகள் விதிக்கப்படுமா என பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்சையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கருத்து வெளியிடுகையில், சிங்கள தீவிரவாதிகள் பாராளுமன்றில் ஒரு ஆசனத்தைத கூட பெறமுடியாது. கடந்த தேர்தலின் போது அவர்களது பலவீனம் வெளிப்பட்டது. ஆனால் காமினியின் கொலையைத் தொடர்ந்து சிங்கள தீவிரவாதிகள் மீண்டும் வகுப்புவாத நெருப்பை தூண்டுகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

# கட்டடம் இல்லை

(யாழ்ப்பாணம்)

அரியாலை டயஸ் குடியிருப்பில் உள்ள முதலுதவிச் சிகிச்சை நிலையததிற்கென தனியான கட்டடம் ஒன்று இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சிகிச்சை நிலையம் முன்பு இயங்கி வந்த கொட்டகை மிகவும் பழுதடைந்துள்ளமையால் நிலையம் தற்போது தொண்டர் ஒருவரின் வீட்டிலேயே தற்காலிகமாக இயங்கி வருவதாகக் கூறப்பட்டது. (22)

# நிலக்கீழ் நீர் சேமிப்பை அதிகரிப்பது யாழ். குடாநாட்டின் முக்கிய தேவை

எமது தமிழீழத்தின் எந்தவொரு வளமும் பயனற்றவை அல்ல. அன்று காலனித்துவ நாடுகளின் ஆக்கிரமிப்புகள் சிறிலங்காவின் திட்டங்களையும் முயற்சிகளையும் மழுங்கடித்த காலகட்டம் வேறானது. ஆனால் இன்று தற்காலத்தில் அதாவது எமது சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்கக் காரணமான சிறிலங்கா அரசின் எமது பிரதேச ஆக்கிரமிப்புக்கள், அடக்கு முறைகள் எல்லாமே மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட காலகட்டத்தில் எமது விழிப்புணர்வும் வீறுடன் எழுந்தது. இந்த அடக்கு

காக்கவேண்டுமெனின் அந்நீர்வளத்தை கொண்டிருக்கின்ற நீர் நிலைக்ள் பராமரிக்கப்படவேண்டும். இவை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டாலே குறிக்கப்பட்ட காலகட்டத்தில் கிடைக்கின்ற மழைநீரைச் சேமித்து வைக்க முடியும். இந் நீர் நிலைகள் பராமரித்தல் என்கின்ற போது யாழ். குடாவைப் பொறுத்தவரையிலே குறைவாக உள்ளது. ஏனெனில் இங்கு நீர்நிலைகள் அதாவது தரைமேல் நீர் நிலைகள் என்பது சிறியளவாகத்தான் காணப்படுகின்றன. ஆனால் இந் நீர்நிலை

பகுதியால் நீர்வளங்களை பாதுகாக்க வேண்டும் என்ற திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. அன்றைய காலகட்டங்களில் சிறிலங்கா அரசு தமது பிரதேசத்தின் நலன்களை மாத்திரம் கவனத்தில் கொண்டு துரித மகாவலி அபிவிருத்தி விக்டோரியா, ரந்தனிகல என பல முன்னேற்றகரமான திட்டங்களை முன்வைத்து மேற்கொண்டது ஆனால் எமது தமிழீழப் பிரதேசத்தின் நலன்களைக் கவனத்தில் கொண்டு எமது பிரதேசத்தில் எந்தவிதமான முன்னேற்றகரமான திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இன்று

# 55 வயதுக்கு மேல் ஊழியர் சேவை நீடிப்பு அறிவுறுத்தல்

# 1-வது பிறந்தநாள் வாழ்த்து

# 1-வதுபிறந்தநாள்வாழ்த்து
## 22.11.1994-ல்



## ஹாரிணி இராஜகுலசிங்கம்

இராஜகுலசிங்கம்மலர்வதனிதம்பதிகளின் செல்வப் புதல்வி **ஹாரிணி** தனது முதலாவது பிறந்தநாளை 22-11-94-ல் நோர்வேயிலுள்ள அவரின் இல்லத்தில் சிறப்பாக கொண்டாடினார்.

ஹாரிணியை செல்விப்பெரியம்மா, பெரியப்பா, சர்மினி, சிரானி, சாளினி ஆகியோர் பல்லாண்டு பல கலையும் பெற்று சிறப்புற வாழ்க! வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

மெல்ல விரியும் சின்ன சிரிப்பில்
உள்ளம் துளிர்க்குதடி! - உன்
வெள்ளைச் சிரிப்பில் துன்பம் விலகும்
பிள்ளைச் செல்வமடி!
கள்ள நகையால் கடவுளைக் காட்டும்
ஹாரிணி நீயடி
காலம் காலமாய் இப்புன்னகை நிலைக்க-உன்னை
தெய்வங்கள் வாழ்த்துமடி!

**"சுபதர்ஷன்"**
சர்பியன் லேன்,
கொக்குவில்,
இலங்கை.

(10302)

(கொழும்புத்துறை)

நிதி அமைச்சின் கீழ் உள்ள உள் நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம், விலை மதிப்புத் திணைக்களம், சுங்க இலாகா ஆகிய திணைக்களங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் தமது 55 வயது முடிந்ததும் சேவை நீடிப்பு சம்பந்தமாக பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என நிதி அமைச்சு சுற்று நிருப மூலம் தெரிவித்துள்ளது.

சேவை நீடிப்பு விண்ணப்பங்களை மேற்படி திணைக்களங்கள் கொழும்பில் உள்ள தங்கள் தலைமை அலுவலகத்திற்கு இரு மாதத்திற்கு முன்பாக அனுப்பி வைக்கும் படியும், சேவை நீடிப்பு விண்ணப்பம் அனுப்பிய உத்தியோகத்தர்கட்கு சேவை நீடிப்பு அனுமதிக்கடிதம் கிடைக்கப்படாவிடின் அவர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுகளை நிறுத்தி வைக்கும் படியும் நிதி அமைச்சு அதன் கீழ் செயற்பட்டு வரும் திணைக்களங்களுக்கு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது. (24)

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச மானிப்பாய் பட்டினப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை மீண்டும் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இரவு வேளைகளில் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் வீதியால் செல்வோர் அச்சத்துடன் செல்லவேண்டியுள்ளதாகதெரியவருகிறது

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய்

### விசர்நாய்கள் கட்டளைச் சட்டம்

## விசர்நாய்கள் அபாயம்

இத்தால் அறிவிக்கப்படுவதாவது, இலங்கை சட்ட வாக்கங்களின் விசர்நாய்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 476/2 பிரிவு 2ன்) பிரகாரம் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் விசர்நாய்களின் அபாயம் இருக்கிறது. பிரத்தியேகமானகட்டடங்கள்அல்லதுவளவுகள்அல்லதுதோட்டங்கள் தவிர்ந்த இந்தச் சபை எல்லைக்குள் கட்டி வைக்கப்படாமல் அல்லது பிடித்துக்கொண்டு செல்லாமல் பொது இடங்களில் அல்லது வீதிகளில் அல்லது வேறு எந்த இடத்திலும் நிற்கும் எந்த நாய்களையும் என்னால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரால் அழிக்கப்படும்.

இப்பிரகடனம் 1995 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

வலிகாமம் தென்மேற்கு
பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
மானிப்பாய்,
1994.12.01

து. வைத்திலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தென்மேற்கு
பிரதேசசபை,
மானிப்பாய்.

(சி/10844)

டன் எழுந்தது. இந்த அடக்குமுறைகளில் ஒன்றுதான் பொருளாதாரத் தடை. ஆனால் இத்தடை, வளங்கள் அற்ற பிரதேசத்தைத்தான் கட்டுப்படுத்த உகந்ததே தவிர, எமது தமிழீழத்தைக் கட்டுப்படுத்தக் கூடியதல்ல

இந் நிலையில் தான் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சுயமாக தற்சார்புப் பொருண்மியத்தில் வாழ எதிர்பார்ப்புடன் இருந்த மக்களுக்கு அத்திவாரமாக அமைந்தது. அதன் செயற்பாடுகளும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கும் கைகொடுத்து உறுதுணையாக நிற்பவை தமிழீழ வளங்களே. எனவே காலாகாலமாக எமது தற்சார்புப் பொருண்மியத்திற்கு உந்துசத்தியாக இருக்கின்ற வளங்கள் பாதுகாக்கப்படுவதுடன் சிக்கனமாகவும் பாவனைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

அந்த வகையிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியின் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இம் முயற்சிகளில் ஒன்றுதான் நீர்வள பாதுகாப்பாகும். இந்த நீர்வள பாதுகாப்பு முயற்சிகள் 1991-ம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகி இன்றுவரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் தற்போது நீர்வள பாதுகாப்பு முயற்சிகள் தீவிரமடைந்து செல்கின்றமைதான். இம்முயற்சிகளில்தான் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களும் உள்ளடக்கப்படும்.

நீர்வளப் பாதுகாப்பில் பல்வேறு முயற்சிகளும் செயற்பாடுகளும் அடங்கும். முதலில் நீர்வளத்தை பாதுகாக்கின்றன. ஆனால் இந் நீர்நிலைகளைப் பராமரிப்பது சிரமம் அற்றதாக, சிறியதாக இருந்தாலும் இன்னுமொரு பாரிய வேலை காத்துக் கிடக்கின்றது.

அந்தவகையிலே யாழ். குடாநாட்டிலே மேற்கொள்ள வேண்டிய பாரிய வேலை யாவது நிலக் கீழ் நீரின் சேமிப்பை அதிகரிப்பதாகும். அத்துடன் உவர்நீரின் ஊடுருவல் எமது பிரதேசத்தில் அதிகளவில் நடைபெறும் முன்னர் நாம் நந்நீர் வளத்தை பாதுகாக்க வேண்டும். இதனால் மழை கிடைக்கின்ற காலங்களில் மழைநீர் கடலைச் சென்றடைவதைத் தவிர்த்து, நிலக்கீழ் நீரை சேமித்து முயற்சிகளைத் தொடர வேண்டும். இம் முயற்சியால் எமக்கு தேவையான நந்நீர் வளத்தை சேமிக்க முடிவதோடு உவர் நீர் ஊடுருவுவதையும்தவிர்க்க முடியும்.

மேலும் வன்னிப் பெருநிலப்பரப்பை பொறுத்தவரையிலே இதன் புவியியல் அமைப்பு யாழ் குடாவைவிட வித்தியாசமானது. இங்கு யாழ் குடாவைப் போன்று நிலக் கீழ் நீரைத்தான் சேமித்து வைக்க வேண்டும் என்பதல்ல. இங்கு நிலத்தின் மேல் பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே இங்கு தொடரும் முயற்சிகள் என்கின்றபோது மழை நீரை எவ்வளவுக்கு எவ்வளவு தேக்கிவைக்க முடியும் என்பதிலே நீர்வள பாதுகாப்பு முயற்சிகள் தொடர்கின்றன. இவ்வாறான முயற்சிகளே வன்னிப்பெரு நிலப்பரப்பில் இருந்து 1991 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப்

கொள்ளப்படவில்லை. இன்று சுயசார்புப் பொருண்மியம் என்பதில் முன்னேறிக் கொண்டு இருக்கின்ற தமிழீழத்தில் துரிதநீர்வள மேம்பாட்டுத்திட்டம் முன்வைக்கப்பட்டது. இத்திட்டமானது எமது நீர்வளங்களைப் பாதுகாக்கின்ற செயற்பாடுகளாகவும் முயற்சிகளாகவும் அமைகின்றது.

**- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம்**

## ஆசிரிய பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தில் 13 ஆசிரியர்களுக்கு தேவை இருந்தும் ஏழு ஆசிரியர்கள் மட்டுமே தற்போது பணி புரிகின்றனர்.

பெரும் ஆசிரியர் பற்றாக்குறையின் மத்தியிலும் கட்டடவசதியீனங்களுக்கிடையிலும் மாணவர்களுககு கல்வி புகட்டும் இப்பாடசாலை ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்று சித்தியெய்திய மாணவனை உருவாக்கிய பெருமை உடையது என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## இலக்கத்தகடு விநியோகம்

வலிமேற்கு பிரதேசசபையினர் தமது பிரதேச எல்லைக்குட்பட்ட துவிச்சக்கர வண்டிகளுக்குரிய 1994 ஆம் ஆண்டிற்கான இலக்கத் தகடுகளை விநியோகித்து வருகின்றனர். இதுவரை இந்த வருடத்திற்கான இலக்கத் தகடுகளை பெறத்தவறியவர்கள் அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, சுழிபுரம் உப அலுவலகங்களில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என பிரதேசசபை செயலர் திரு. க. திரவியம் தெரிவித்துள்ளார் (41)

## டயஸ் குடியிருப்பில் மலேரியா பரவுகின்றது

(யாழ்ப்பாணம்)

தீவக மக்கள் தங்கியுள்ள அரியாலை டயஸ் குடியிருப்பில் தற்போது சிலரிடையே மலேரியாக் காய்ச்சல் பரவி வருகின்றது.

குறைந்த தொகையினரே இக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பதாக குடியிருப்பில் இயங்கும் முதலுதவி சிகிச்சை நிலையத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை குடியிருப்பில் தேவையற்ற முறையில் ஆங்காங்கே காணப்படும் பாரிய கிடங்குகளில்மழைநீர் தேங்கி நிற்கின்றது. இது நுளம்புப் பெருக்கத்தை அதிகரிக்கவும் அதன்மூலம் தொற்று நோய்கள் ஏற்படவும் ஏதுவாக அமைந்திருப்பதாக குடியிருப்பு வாசிகள் கவலை தெரிவித்தனர். (22)

## மர பாதுகாப்புக்கூடுகள் விசமிகளால் திருட்டு

வீதியோர மரங்களின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்ட கூடுகள் சில விசமிகளின் அடாவடித்தனத்தினால் தொடர்ந்தும் களவாடப்பட்டு வருகின்றன.

கடந்த 13-ந் திகதி இரவு கொடிகாமம் நாவலடி பாடசாலைக்கு அருகாமையில் 10 பாதுகாப்புக் கூடுகளும், எழுதுமட்டுவாள் பகுதியில் 08 கூடுகளும் இத்தாவில் பகுதியில் 05 கூடுகளுமாக மொத்தம் 23 கூடுகள் களவாடப்பட்டுள்ளன.

நாட்டின் சூழலை பேணிப் பாதுகாப்பதற்காக நாட்டப்பட்ட மரங்களின் பாதுகாப்புக்கென அமைக்கப்பட்ட கூடுகள் களவாடப்பட்டால் மரங்கள் பாதுகாக்கப்படமாட்டாது. விறகுத்தேவைக்காக மரங்கள் அழிக்சப்பட்டு வரும் இவ்வேளையில் மரங்களை நட்டு பராமரிக்காது போனால் சூழல் பாதிக்கப்படுவதுடன் எரிபொருள் பிரச்சினையையும் எதிர்நோக்க வேண்டிவரும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

## மொழிகளை வாசித்தறிதல் மட்டுமே கல்வியல்ல

### பரிசளிப்பு விழாவில் கல்விப்பணிப்பாளர்

(தொல்புரம்)

''இந்த மண்ணிலே நாம் கல்வி அறிவினைப் பெற்று வாழ்வதற்காகவே எமது மூதாதையர் பாடசாலைகளை தோற்றுவித்தனர். அறிவுப் பசியை தீர்ப்பதற்கு நல்ல கல்விச் சாலைகள் நம் தேசமெங்கும் தோன்றியுள்ளன. இன்றையமாணவர்கள் நாளைய மன்னர்கள். இவர்களை நற்பிரசைகளாக உருவாக்குவதே எமது தலையாய கடமை.''

இவ்வாறு சுழிபுரம் பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய பரிசளிப்பு விழாவில் வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

''கல்வி என்பதுமொழிகளை வாசித்தறிதல் மாத்திரமல்ல கல்வி மன விரிவிற்கும், தெளிவுக்கும் ஓர் சிறந்த கருவியாகும், கல்வியறிவு கற்பதில் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. கற்றவைகளை நன்றாக உணர்தல் வேண்டும். கற்றவைகளை உணராதவன் எவ்வளவு கற்றாலும் கற்றவனாகக் கருதப்படமாட்டான். உணர்தலின் மூலம் தான் மனவிரிவு ஏற்படும். மனவிரிவு ஏற்பட்டால் வாழ்க்கையில் குறுகிய எண்ணங்கள் மறைந்து பரந்த நோக்குடன் எவ்விடயத்தையும் சீர் தூக்கிப் பார்க்க முடியும். ஆகவே கற்பவைகளைக் கசடறக்கற்று கற்ற நெறிப்படி ஒழுக முன்வர வேண்டும். இன்று பரிசில்களை பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் போன்று இனிவரும் வருடத்தில் ஏனைய மாணவர்களும் வெகுமதிகளைப் பெறுவதற்கு தம்மாலான கல்வி மேன்மை முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார். (41)

## பனை தென்னை வள அபிவிருத்தி

## சுன்னாக சங்கம்

## அதிகூடிய லாபம் பெற்றது

# வலிகாமம் பகுதியில் கொலரா பரவ ஆரம்பித்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரப் பகுதி மற்றும் வலிகாமம் பகுதிகளில் மீண்டும் வாந்திபேதி (கொலரா) நோய் பரவ ஆரம்பித்துள்ளது. இந்நோயினால் பீடிக்கப்பட்ட இருவர் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இதனைத் தொடர்ந்து யாழ் போதனா வைத்திய சாலையில் மூடப்பட்டிருந்த கொலரா வாட் கடந்த சனியன்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இவ்வாட் ஏற்கனவே ஒக்டோபர் மாதம் 24ஆம் திகதி மேற்படி நோய்பரவ ஆரம்பித்தமையைத் தொடர்ந்து திறக்கப்பட்டது.

அன்றையதினம் தொடக்கம் மேற்படி நோயினால் பீடிக்கப்பட்ட 14பேர் அங்கு சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் இருவரே இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என இனம்காணப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நோய் கட்டுப்பாட்டிற்கு வந்ததை அடுத்து நோயாளர்களின் வருகை இல்லாமையினால் இவ்வாட் பூட்டப்பட்டது.

தற்சமயம் மீண்டும் இந்நோயின் தாக்கம் தென்படுவதை அடுத்து இவ்வாட் திறக்கப்பட்டது. இவ்வாட்டில் அச்செழுவைச் சேர்ந்த எம். சிவசம்பு (வயது 38), வண்ணார் பண்ணையைச்சேர்ந்த வி. கந்தசாமி (வயது 56) ஆகிய இருவருமே சனியன்று அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இந்நோயின் தாக்கம் தென்படுவதினால் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்குமாறும் கொதித்து ஆறிய நீரை பருகுமாறும் சுகாதார பகுதியினரால் மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும் இந்நோயின் தாக்கம் தொடர்பாக பிராந்திய சுகாதார பணிமனைக்கும் யாழ். போதனா வைத்திய சாலை அறிவித்துள்ளதாக தெரியவருகின்றது. (பா)(தி)

## மத்தியஸ்தர் வகுப்புகள்

புநிய உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களைத் தெரிவுசெய்வதற்கான விரிவுரை வகுப்புக்கள் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தால் ஆரம்பிக்கப்படடுள்ளன. இவ்வகுப்புகள் தொடர்ந்தும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10மணிக்கு ஈச்சமோட்டை வீதியில் உள்ள சங்க செயலகத்தில் நடைபெறும். 20 வயதுக்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புக்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இதற்கான பரீட்சை எதிர்வரும் தைமாதப்பிற்பகுதியில் நடைபெறும் என எ்திர்பார்க்கப்படுகின்றது,

## ஈ.பி.டி.பி. கைதுசெய்த குடும்பஸ்தர் தகவலில்லை

ஈ.பி.டி.பி. யினால் கைதாகிய இளம் குடும்பஸ்தர் ஒருவரின் நிலைபற்றி எந்த தகவலும் இல்லையென கூறப்படுகின்றது. காரைநகர் கிராம சபையில் காவலாளியாக கடமையாற்றி வந்த தர்மராசா என்ற இக் குடும்பஸ்தரை 93-ம் ஆண்டு நடுப்பகுதியில் விசாரணைக்கென ஈ.பி.டி.பியினர் கூட்டிச் சென்றனர்.

பின்னர் இவருக்கேற்பட்ட கதி என்ன என்பது பற்றி தகவல் ஏதும் இல்லையென்றும் தெரிய வருகின்றது. தகவல் பெறச் சென்ற இவரது குடும்பத்தினரும் தெளிவான பதில் ஏதும் கிடைக்காததை அடுத்து தமது முயற்சியைக் கைவிட்டு தமக்குள்ளேயே வேதனைப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிய வருகின்றது. (22)

## தீவகத்தில் கைதானோர் கொழும்பில் சிறைவைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று வருடங்களுக்கு முன் அதாவது தீவகத்தில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப காலப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட - தீவகம் நாரந்தனையைச் சேர்ந்த செபஸ்தி பிரான்சிஸ் என்ற வயோதிபரும், ஜோசப் ஜெபேட் என்ற சிறுவனும் தற்போது கொழும்பில் சிறைச்சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இது குறித்து அரியாலை சாம்சன் குடியிருப்பில் வசிக்கும் பிரஸ்தாப சிறுவனின் குடும்பத்தினர் தரப்பில் பெண்மணி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

''சம்பந்தப்பட்ட இருவரும் கைதாகிய பின் பலரிடமிருந்து ஊர்ஜிதமற்ற தகவல்கள் பல கிடைக்கப்பெற்றன. ஆயினும் தற்போது 'நம்பகரமான வட்டாரங்கள் மூலம் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தகவல் கிடைத்துள்ளது'' என்று கூறினார்.

(22)

## கடும் மழையினால் வீதிகள் பாதிப்பு

(தொல்புரம்)

தற்போது நாட்டில் பெய்துள்ள மழை காரணமாக பல இடங்களில் வீதிகள் மீண்டும் சேதப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இதனால் மக்கள் பிரயாணத்தின் போது பல அசௌகரி

கோட்டையிலிருந்து நவாலி, சங்கரத்தை பிரதான வீதியும் குண்டும்குழியுமாககாட்சியளிக்கின்றன இந்த நிலைதொடருமானால் பல சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணத்தை தொடரவேண்டிய நிலை ஏற்படும். அத்தோடு அவசர

## பாடசாலை திருத்தல் பணி

கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள நிதியைக் கொண்டு கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இயங்கும் புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயத்தில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இதன் முதல் கட்டமாக வித்தியாலயத்தின் ஐந்து கட்டடத் தொகுதிகளிலும் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் வேலைத் திட்டத்தை

## நாகேஸ்வரி வித்தியாலயம் தமிழ்த்தின போட்டியில் முதலிடம்

யாழ் கல்விவலயம் இரண்டு உடுவில் கோட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டியில் சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் முதலிடம் பெற்றது. இதே வேளை கோட்டமட்டத்தில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி இப்பாடசாலை தாச்சிப் போட்டியில் ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் முதலிடம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கோட்டமட்டத்தில்தாச்சிப் போட்டியில்முதலிடம் பெற்ற இப்பாடசாலை அணிகள் இரண்டிற்கும் சுழற்சி முறையான வெற்றிக் கேடயம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை இவ் வெற்றிக்கு காரணமான வீரர்களுக்கு ஒரு சான்றிதழ் கூடவழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பாடசாலை அனுமதி

(தொல்புரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் புதிய மாணவர்கள் எதிர் வரும் 28,29 ஆம் திகதிகளில் சேர்க்கப்படுவர், அன்றைய தினங்களில் கல்லூரி அலுவலகத்தில் சமூகமளிக்குமாறு புதிய மாணவர்களை கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (41)

## 4-ம்ஆண்டுநினைவலைகள்



## கப்டன் டோரா

### (கந்தப்பு பத்மாவதி)

தாயின் முத்தாக 15. 12. 1963

தாயக வித்தாக 22- 11- 1990

திதி:- 06-12-1994

தாயகத்து வானில் நீ
தாரகையாய் ஆகியின்று
ஆயதடி நான்காண்டு
ஆ! மகளே உடன்பிறப்பே
தூயவளே! சிற்றன்னை
தொடருகின்றோம் சுவடுவழி-ஆனாலும்
வாயசைத்து நீயுரைத்த
வார்த்தைகளைக் கேட்டிடுங்கால்
நீயகன்ற நினைவலையில்-எம்
நெஞ்சமெல்லாம் கலங்குதம்மா!

இவருடன் வீரச்சாவெய்திய அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம். இன்று எமது இல்லத்தில் நினைவுக்கிரியையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

நீங்காத நினைவுடன்

பனை தென்னை வள அபிவிருத்தி

## சுன்னாக சங்கம் அதிகூடிய லாபம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில், 1994 ஜூன் மாதம் வரையான காலப் பகுதியில் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அதிகூடிய இலாபத்தை 14,75,786 ரூபா ஈட்டியுள்ளது.

குறைந்த இலாபத்தை 2,71,902 ரூபா பருத்தித் துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஈட்டியுள்ளது.

நட்டத்தில் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் மட்டுமே இயங்கியுள்ளது. என மேற்படி இலாபநட்ட விபர அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்படுகின்றது. (22)

துள் மழை காரணமாக பல இடங்களில் வீதிகள் மீண்டும் சேதப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இதனால் மக்கள் பிரயாணத்தின் போது பல அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

சங்கானையிலிருந்து சித்தன்கேணி, வழக்கம்பரை, சுழிபுரம், தொல்புரம், மூளாய் பிரதான வீதியும், ஆனைக்

சங்கரத்தைப் பிரதான வீதியும் குண்டும்குழியுமாககாட்சியளிக்கின்றன இந்த நிலைதொடருமானால் பல சிரமங்களுக்கு மத்தியிலேயே பயணத்தை தொடரவேண்டிய நிலை ஏற்படும். அத்தோடு அவசர நோயாளியை கொண்டுசெல்வதானால் அதுஇயலாதகாரியமாகவுள்ளதுஎன பிரயாணி ஒருவர் கவலையுடன் தெரிவித்தார். (41)

படவுள்ளன.

இதன் முதல் கட்டமாக வித்தியாலயத்தின் ஐந்து கட்டடத் தொகுதிகளிலும் திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் வேலைத் திட்டத்தை குடியிருப்பைநிர்வகித்து வரும் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளவுள்ளதாக வித்தியாலய வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

இவருடன் வீரச்சாவெய்திய அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம். இன்று எமது இல்லத்தில் நினைவுக்கிரியையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கின்றோம்.

நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்.

சோதியா வீதி,
'சசி இல்லம்'
கரவெட்டி தெற்கு,
கரவெட்டி.

(சி-10824)

## 2-ம் ஆண்டுநினைவஞ்சலி



தோற்றம்
18-11-1936

மறைவு
29-11-1992

### கந்தையா சிவலிங்கமூர்த்தி

(முன்னாள் படவரைஞர், நில அளவைத் திணைக்களம்)

திதி: 06-12-1994

இரண்டாண்டு ஆனதையா நீங்கள் இறைவனடி சேர்ந்து
இன்பமாய் வாழ்ந்திட்ட இனிய நாட்கள் இனி வருமோ?
இல்லறத்துணைவியும் ஈன்றெடுத்த தாயும் இனிய பிள்ளைச் செல்வங்களும்
இணைந்து பிறந்த உடன் பிறப்புக்களும் இனிய உங்கள் சுற்றத்தாரும்
இறைவனருகில் நீங்கள் என்றும் இனிதாய் இளைப்பாற வேண்டுமென்று
இறைவனை துதிக்கின்றோம். உங்களை எங்கள் இதயத்தில் பூசிக்கின்றோம்.


231, சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

தாய், மனைவி, பிள்ளைகள்,
உடன்பிறப்புக்கள்,
உறவினர்கள்.

(10285)

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலிகள்





சிதம்பரநாதன்
தங்கம்மா

ஏகநாதன்
இராமநாதன் (பபா)
(கட்டிட அமைப்பு மேற்பார்வையாளர்)

23-12-1993 < மறைவு > 06-12-1993

பபா உன் நினைவழிக்க யாராலும் முடியாது
பாசமிகு வாழ்வும், பல்கலைப் படிப்பும்
பாதியில் பறிக்கப்பட்டாலும்
பொது நல சேவைக்காய் வாழ்ந்தீர்!
தினமுமுனைப் போற்றுகின்றோம்.

பந்தம், பாசம் என்பதைப் பார்த்து
பதினெட்டாம் நாள், உமது பாசவலையில் சிக்கிய
பாட்டியையும் உன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டீர்
அகலாது உங்கள் நினைவு என்றென்றும் எங்களை விட்டு.

உங்களை இழந்த வேதனை யார் சொல்லியும் ஆறாது.
யாருக்கும் சொல்லித் தீராது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

''விஜய வாசா'',
சீரணி நாகபூசணி அம்பாள் கோவிலடி,
சண்டிலிப்பாய்.

-குடும்பத்தினர்

(10266)

## ஈராண்டு இதய அஞ்சலி



தோற்றம்:-
1941-10-30

மறைவு:-
1992-11-28

### P. ஜீவா

திதி:- 6-12 1994

பாசத்தை பொழிந்து அன்பாக வளர்த்திட்டு எங்களை
யெல்லாம் ஆளாக்கிய அருமையான அப்பாவே ...
ஒரு வார்த்தை கூறாது எம்மை தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள் ...
எங்களை வளர்த்த நீங்கள்எப்பொழுதும்எங்களையே சுற்றி நிற்பீர்கள் .....
நடமாடும் வீட்டினில் படமாகி விட்டீர்கள்அப்பா ...
அப்பா என்று ஆசையுடன் கூற முடியாதவாறு
எம்மை அநாதை ஆக்கி விட்டு எங்கு சென்றீர்கள்
அப்பா ....
எங்களிடம் இருந்து உங்களைப்பிரித்தாலும் எங்கள்
இதயத்தில் நிலையாக நிற்கும் உங்கள் நினைவு
ஈராண்டு என்ன எத்தனை ஆண்டு சென்றாலும்
எங்கள் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய அம்பாளை வேண்டுகிறோம்.

ஓயாது அழுததனால் ஈராண்டாய் போன பின்னும் காயாத கண்களுடன் காலமெல்லாம் காத்திருக்கும்,

பாசமிகு
மனைவி, பிள்ளைகள், மருமகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

திருநெல்வேலி

(10296)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

சிந்தனைக்கு

கிணறு வற்றிய பின்னரே
நமக்கு தண்ணீரின் அருமை
தெரியவருகிறது.

- பெஞ்சமின் ஃ பிராவ்ளின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## காலம் கடந்த ஒப்புதல்

இனப்பிரச்சினை விவகாரத்தில் சிங்கள அரசியல்வாதிகள் பலர் அரசியல் யதார்த்தத்திற்குப் புறம்பாக செயற்பாட்டைக் கொண்டவர்களாகவே கடந்த காலம் முழுதும் இருந்து வந்துள்ளனர். இந்த விடயத்தில் அவர்கள் தம்முடன் கூட இருந்த ஏனைய இனத்தினர், மதத்தினர் ஆகியோரின் கருத்துக்களைப் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை.

ஆனால் அண்மைக்காலத்தில் இப்போக்கில் சற்று மாறுதல் தெரிகிறது. முன்னாள் அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரும் ஐ.தே.கவின் தவிசாளருமான ஏ.சி.எஸ். ஹமீட்டின் கருத்தையும் இதன் அடிப்படையிலேயே நோக்க வேண்டியுள்ளது. ''இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றே காணப்படவேண்டும். இதற்கு இராணுவத் தீர்வொன்றை காணமுடியாது. மேலும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப்புலிகளின் பங்களிப்பு முக்கியமானது. விடுதலைப்புலிகளை நிராகரித்து எந்த நிரந்தரத் தீர்வும் காணமுடியாது'' என்பதே அவர் தற்பொழுது வெளியிட்டுள்ள அபிப்பிராயமாகும்.

இன்று தனது கருத்துக்களை வெளிப்படையாக முன் வைத்துள்ள ஏ.சி.எஸ் ஹமீட் ஏன் ஐ.தே.க.ஆட்சிக்காலத்தில் இதனை வெளிப்படையாக முன்வைக்கவில்லை என்ற கேள்வி நியாயபூர்வமாக இருப்பினும் கூட, ஆரம்பத்தில் இருந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கருத்தையே ஹமீட் பொதுவாகக் கொண்டிருந்ததாகவே கருத இடமுண்டு. ஆனால் ஐ.தே.கவிற்குள் இருந்த அரசியற் சூழ்நிலை காரணமாக அவர் தமது கருத்தை வெளியிடாமல் இருந்திருக்க வாய்ப்புக்கள் உண்டு.

அவ்வாறு ஹமீட் எண்ணியிருப்பாரேயானால் அதற்குக் காரணமும் இல்லாமல் இல்லை. அமைச்சர் தொண்டமானும் முன்னாள் சபாநாயகர் எம். எச். முகமட்டும் முன்னர் இனப்பிரச்சினை விவகாரத்தில் எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டமை இதற்குச் சிறப்பான முன்னுதாரணங்களாக அவருக்கு இருந்திருக்கக் கூடும். அல்லது அன்றைய ஐ.தே.க பற்றி அவர் சரியான கணிப்பீட்டைத் தானே செய்திருக்கவும் கூடும்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணமுடியாது என்பதையும், விடுதலைப்புலிகள் இன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட ...

# அமைச்சர்கள் சவான் - ராஜேஷ் பைலட் மோதல்

# ராவை காஷ்மீர் விடயத்தில் தலையிடவைத்தது

## உள்துறை அமைச்சிடமிருந்து காஷ்மீர் விவகாரம் பறிக்கப்பட்டது

காஷ்மீர் விவகாரம் இதுவரை இந்திய உள்துறை அமைச்சின் கையிலேயே இருந்து வந்தது. தற்போது இவ்விவகாரம் பறிக்கப்பட்டு பிரதமர் அலுவலகத்திடமே பிரதமர் நரசிம்மராவால் கொடுக்கப்பட்டது இந்திய மத்திய அரசிலும் காங்கிரஸ் கட்சியிலும் ஒரு உலுக்கு உலுப்பியுள்ளது.

உள்துறை அமைச்சர் சவானுக்கோ இணையமைச்சர் ராஜேஷ் பைலட்டிற்கோ பிரதமர் இப்படிச் செய்யப்போகிறார் என்று முன்கூட்டியே தெரியாது. பிரதமரின் ஆணை வந்த பின்பே தெரியும். இந்த அதிரடி நடவடிக்கையை உடனடியாக எடுத்ததற்கு முக்கிய காரணம் சவானுக்கும் ராஜேஷ் பைலட்டிற்கும் இடையே நடக்கும் ஓயாத சண்டைதான். காஷ்மீர் விவகாரத்தில் இருவரும் எதிர் எதிரான நிலையை எடுத்து அது வெளிப்படையாகவே தெரியும்படி மோதிக் கொண்டனர். அண்மையில் லண்டன் பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் ராஜேஷ்பைலட்டை கூறியவை அவருடைய சொந்தக் கருத்துகள். அவை அரசின் கொள்கையல்ல என திட்டவட்டமாக சவான் கூறியது ராஜேஷ் பைலட்டை உசுப்பி விட்டது: சவானின் பேட்டி பத்திரிகையில் வெளிவந்தவுடன் சவானின் போக்கை கண்டித்து பிரதமருக்கு ராஜேஷ் பைலட் காரசாரமாக ஒரு கடிதம் எழுதினார். சவானுக்கும் ராஜேஷ் பைலட்டிற்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடுகள் புதிதல்ல என்றாலும் வெளிநாட்டில் சவான் இதைப் பற்றி பேசியது மிகத்தவறு என கருதுகிறார் ராஜேஷ் பைலட்.

வெளிநாட்டுப் பயணத்திற்கு பின்னர் இந்தியா திரும்பியதும் சவான் இவ்விடயத்தில் மறுப்பு தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. சவான் பத்திரிகையாளர்களை சந்திக்க முன் பிரதமர் அலுவலகத்திலிருந்தும் உள்துறை அமைச்சக அதிகாரிகளிடமிருந்தும் ''நான் கூறியதை பத்திரிகைகள் சரியாக விளங்கிக் கொள்ள வில்லை'' என மழுப்புமாறு சவானுக்கு அறிவுரை கூறப்பட்டது.

ஆனால் சவான் பிடிவாதமாக மறுத்துவிட்டார். பத்திரிகையாளர்களிடையேதான் லண்டனில் கூறியது சரியே எனத் திட்டவட்டமாகக் கூறினார். இவ்விடயம் பிரதமர் காதுக்கு எட்டியவுடன் பிரதமர் ராவுக்கு அளவு கடந்த கோபம் ஏற்பட்டது. எப்படியாவது இவ் விடயத்தில் அரசை தர்மசங்கடத்திற்கு ஆளாக்காமல் பிரச்சினையை சவான் முடித்துவிடுவார் என்று தான் எதிர்பார்த்தது நடக்கவில்லையே என்று பிரதமர் ராவுக்கு கோபம் உடனடியாக பிரதமர் அலுவலக அமைச்சர் புவனேஷ் சதுர்வேதியை அழைத்து இனிமேல் பொறுத்தால் நிலைமை கைமீறிப் போய் விடும். காஷ்மீர் விவகாரத்தில் இனிமேல் உள்துறை அமைச்சகம் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. பிரதமர் அலுவலகமே சமாளிக்கும் என அறிவித்து விடுங்கள் என்று சொல்லி விட்டார்.

அமைச்சரவையில் நரசிம்மராவுக்கு அடுத்தபடியான பொறுப்பில் இருக்கும் சவானுக்கு இது மிகப்பெரிய அதிர்ச்சி. பிரதமர் இத்தகைய அதிரடி நடவடிக்கையில் ஈடுபடுவார் என்பது அவர் கொஞ்சம் கூட எதிர்பாராதது. ராஜேஷ் பைலட்டிற்கு அடி என்றாலும் அவர் சவானுக்கு நேர்ந்த அவமதிப்பைக் கண்டு மகிழ்ச்சியாக இருக்கிறார்.

நரசிம்மராவ் இத்தகைய முடிவை எடுத்தமைக்கு இன்னோர் காரணமும் உண்டு. காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் பிரசாரத்தை முறியடிக்க இந்திய அமைச்சர்களும் வெளிவிவகாரத்துறை அதிகாரிகளும் வெளிநாடுகளில் முயற்சி செய்துகொண்டிருக்கின்றனர். அவர்களில் சிலர் இவ்விவகாரத்தில் உள்துறை அமைச்சர்கள், மாநில ஆளுநர் போன்றோர் ஒருமித்த கருத்தை தெரிவிக்காததன் காரணமாக வெளிநாட்டுத்தலைவர்கள் இந்திய அரசின் நிலையை பற்றிப் பரிகாசம் செய்கிறார்கள் என பிரதமரிடம் புகார் செய்துள்ளனர். இதனால்தான் பிரதமரின் இந்த நடவடிக்கை என்றும் சொல்லப்படுகிறது.

தற்சமயத்திற்கு பிரதமர் அலுவலகத்தில் காஷ்மீர் விவகாரத்தை கவனிக்க தனிக்குழு அமைக்கப்படலாம். சில மாதங்களின்பின் பிரதமர் அமைச்சரவையை மாற்றியமைத்தால் இந்தப்பிரச்சினைக்கென தனி அமைச்சர் நியமிக்கப்படலாம். சுதந்திரம் கிடைத்த பின்னர் 40 வருடங்களுக்கு முன்னால் கோபாலசாமி அய்யங்கார் தலைமையில் காஷ்மீர் விவகாரத்தைக் கவனிக்க தனி அலுவலகம் நேருவின் அமைச்சரவையில் செயற்பட்டது. அதேமாதிரி மீண்டும் செயற்படலாம்.

தேர்தலுக்குப் பின்னர் அமைச்சரவையில் நிச்சயமாக மாறுதல்கள் பிரதமர் கொண்டு வருவார் என காங்கிரஸ் கட்சியினர் எதிர்பார்க்கின்றனர். பிரதமரின் நடவடிக்கை காங்கிரசில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது இவ்வாறு இருக்கும் போது இந்திய உள்துறை அமைச்சகம் இன்னுமோர் சர்ச்சையிலும் சிக்கியுள்ளது. முன்னாள் பஞ்சாப் ஆளுநர் சுரேந்திரநாத் சண்டிகாரிலிருந்து இமாசலப் பிரதேசத்திற்கு ஜூலை மாதம் 10-ம் திகதி சென்ற போது விமானம் விபத்திற்குள்ளாகி அவரும் அவரின் முழுக்குடும்பத்தினரும் மரணமடைந்தனர். சண்டிகாரில் ராஜ்பவனில் அவர் மறைவுக்குப் பின் அதிகாரிகள் பல கோடிக்கணக்கான ரூபாய்களை கண்டுபிடித்தனர் எனக் கூறப்படுகிறது.

உடனடியாக மாநில அதிகாரிகள் டில்லிக்கு தகவல் கொடுத்து கண்டு பிடிக்கப்பட்ட பணம், நகை, நிலம், வீடு சம்பந்தமான பத்திரங்களை உள்துறை அமைச்சகம் ஒரு விசேட விமானம் மூலம் டில்லிக்கு எடுத்து சென்றுவிட்டதாக கூறப்படுகின்றது. இது குறித்து மாநில முதலமைச்சருக்குகூட சொல்லவில்லை என மாநில எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

விமான விபத்திற்குப் பின் சுரேந்திர நாத்தின் குடும்பத்தில் ஒரு மகன் தான் உள்ளார். உயரதிகாரியான அவருக்குக் கூட விடயம் சொல்லப்படவில்லை. வருமான வரி அதிகாரிகள் சுரேந்திர நாத்திடம் இவ்வளவு பணம் எப்படி வந்தது என மறைமுகமாக விசாரணை செய்யும்படி கோரப்பட்டுள்ளனர். ஆனால் சவான் இதை மறுக்கிறார். கண்டுபிடிக்கப்பட்டவை இந்திய தேசிய அரசியலில் அடிக்கடி அடிபடும் ஒரு சாமியாரின் பணமாக இருக்கலாம் என எதிர்க்கட்சியினர் சந்தேகிக்கின்றனர்.

[தமிழகச் சஞ்சிகை ஒன்றிலிருந்து]

## ஜே.வி.பி.நிஹால் கலபதிக்கு எம். பி. பதவி கிடைத்தது?

(கொழும்பு)

ஜே.வி.பியின் நிஹால் கலபதி பாராளுமன்றத்திற்கு தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியல் மூலம் இவர் தெரிவானதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முற்போக்கு முன்னணி சார்பில் போட்டியிட்ட நிஹால் கலபதி இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகி பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்காவிற்கு ஆதரவு தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

## காஷ்மீர் எல்லை நகர் மீது பாக்.படைகள் பீரங்கித்தாக்கு

(டில்லி)

பாகிஸ்தானிலிருந்து ஏவப்பட்ட ஆறு ஏவுகணைகள் காஷ்மீர் மாநிலத்தின் எல்லை நகரில் கடந்த வாரம் வீழ்ந்து வெடித்தன. இதனால் பாரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை.

காஷ்மீர் மாநில தலைநகர் ஜம்மு நகரிலிருந்து 153மைல் ... தன ஐ.நா. இராணுவ அவதானிப்பு அலுவலகம் உள்ள கட்டடத்திற்கு அருகாக நான்கு ஏவுகணைகளும் பள்ளத்தாக்கு ஒன்றில் இரு ஏவுகணைகளும் வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது

இத்தாக்குதலைத் தொடர்ந்து எல்லைப் புறத்தில் உள்ள இந்திய-பாகிஸ்தானிய படைகள் பரஸ்பர துப்பாக்கிச் சூடுகள் நடத்தின. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் ஏதும் அறிவிக்கப்படவில்லை.

## 'காஷ்மீர் பெண்களுக்கும்

ஆனால் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண முடியாது என்பதையும், விடுதலைப்புலிகள் இன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட முடியாது என்பதையும், கண்டு கொள்வதற்கும், விளங்கிக் கொள்வதற்கும் பெரிய இராஜதந்திர அறிவு தேவையானதொன்றல்ல. கடந்த காலத்தில் அனுபவம் தந்த பாடமே போதுமானதாகும்.

அதிலும் இந்திய இராணுவத்திற்குக் கிடைத்த பாடம் முக்கியமானது. விடுதலைப்புலிகளைத் தவிர்த்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுத்த முயற்சிகள் எவ்வாறு தோல்வி கண்டது என்பதற்கு இது ஒரு சிறப்பான உதாரணமாகும். இந்த வகையில் திரு. ஹமீட் தெரிவித்திருப்பது புதிய விடயமல்ல.

ஆனால் இன்னும் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினராகவும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்துகொண்டு கூறியிருப்பது தான் முக்கியமானதாகும், ஆயினும் ஐ.தே.கவின் கொள்கையில் ஏற்பட்ட மாற்றம் என்று இதனைக் கூற முடியாதுவிட்டாலும் கூட, ஐ.தே.கவில் உள்ள ஒரு பகுதியினர் இது குறித்துச் சிந்திக்கவும், பேசவும் தலைப்பட்டுள்ளனர் என்பதே முக்கியமானது.

இதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே காரணமாகும். அவரே விடுதலைப்புலிகளுடன் பேசுவதன் மூலமும், அரசியற் தீர்வு காண்பதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பதை தெளிவுபடக் கூறியவர் ஆகும், இந்தவகையில் ஏ.சி.எஸ். ஹமீட் போன்ற சிறுபான்மை இனத்தவர்கள் இன்று அதை ஒத்த கருத்துக்களை முன் வைக்கக் கூடியதாகவுள்ளது. இல்லாது போனால் திரு. தொண்டமான் ஐ. தே. க. காலத்தில் சமாதானத்தீர்வு குறித்து முன்வைத்த திட்டத்திற்கு பேரினவாதத்திடம் இருந்து கிளம்பியது போன்றதொரு பலமான எதிர்ப்பு கிளம்பியிருக்கக் கூடும்.

ஆனால் யார் ஏற்றுக் கொண்டால் என்ன? ஏற்றுக் கொள்ளாதுவிட்டால் என்ன? இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பது அரசியற்தீர்வு தான் என்பதும், அதுவும் விடுதலைப்புலிகள் அமைப்புடனேயே செய்து கொள்ளவேண்டும் என்பதுமே அரசியல் யதார்த்தமாகும். நிரந்தரத் தீர்வு என்பது இதிலேயே தங்கியுள்ளது.

இந்தவகையில் இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காணவும், புலிகளுடன் பேச்சு நடத்தவும் நடவடிக்கைகளைத் தீவிரமாக்க வேண்டும். இதே வேளை ஹமீட் போன்றவர்களும், பேச்சுக்களுடன் நிற்காது இனப்பிரச்சினைத்தீர்விற்கு சந்திரிகா அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்பொழுதே தீர்வு குறித்து முன்னேற முடியும். ஆனால், இறுதி நேரத்தில் இவ்வாறான விடயங்களில் தான் தெரிவித்தது கட்சியின்கருத்தல்ல, எனது சொந்தக் கருத்து எனக் கூறித் தப்பித்துக் கொள்வதே அனேக அரசியல் வாதிகளின் பண்பாகும். ஹமீட் இதற்கு விதி விலக்காகச் செயற்பட்டால் மட்டுமே அவரின் கூற்றில் அர்த்தம் இருக்கும்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

# செய்தியறிக்கைக்காக விளம்பர நிதியுதவி

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தற்போது தனது செய்தியறிக்கைகளுக்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து விளம்பர நிதியுதவியை பெற்றுவருகிறது.

இந் நிறுவனங்களின் விளம்பரத்தை செய்தி ஆரம்பிக்க முன்னரும் செய்தியின் இடையிலும் செய்தி முடிவிலும் ஒலிபரப்ப, ஒலிபரப்பக் கூட்டுத் தாபனம் மேற்படி நிறுவனங்களிடமிருந்து நிதியை கணிசமான அளவில் பெற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. ஒலிபரப்பாகும் செய்தி குறிப்பிட்ட அந் நிறுவனத்தின் ஆதரவில் ஒலிபரப்பப்படுவதாக அறிவிப்பாளரினால் இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் அறிவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இலங்கை வங்கி, சேலான் வங்கி, காப்புறுதி கூட்டுத்தாபனம், யூனியன் கம்பனி என்பவை இதுவரை செய்திக்காக நிதியுதவி அளித்து விளம்பரம் செய்துள்ளன.

# டீசலை திருட முயன்ற சிற்றூழியர் சிக்கினார்

## யாழ். போதனா வைத்தியசாலையில் சம்பவம்

யாழ் போதனா மருத்துவமனையில் இருந்து 25 லீற்றர் டீசலை திருடிச்செல்ல முற்பட்ட சிற்றூழியர் ஒருவர் பாதுகாப்பு ஊழியரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

நேற்றுமுன்தினம்இரவு9.30 மணியளவில் நடந்த இத்திருட்டு முயற்சியை அலுவலர் வாயிற்கதவில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு ஊழியர் கண்டு அவ்விடத்திற்கு ஓடிச்சென்ற சமயம் புற்கள் நிறைந்த தரையில் ''கான்'' ஒன்று கிடப்பதைக் கண்டார். தொடர்ந்து மருத்துவமனை பகுதிகளை நோட்டமிட்ட பாதுகாப்பு ஊழியரிடம் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட சிற்றூழியர் மாட்டிக்கொண்டார்.

மேற்படி சிற்றூழியர் தனது தாயாருக்கு சுகவீனம் எனவும் அவரை மருத்துவ மனையில் வைத்திருப்பதாகவும் பிடிபட்டவுடன் தெரிவித்தார். அதன் பின்னர் அவரை விசாரித்த போதே அவர் யாழ் போதனா மருத்துவமனையின் சிற்றூழியர் என தெரியவந்தது. அத்துடன் பாதுகாப்பு ஊழியர் ஒருவரும் இதற்கு உடந்தையென அச்சிற்றூழியர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேற்படி சிற்றூழியரையும் உடந்தையென தெரிவிக்கப்பட்ட பாதுகாப்பு ஊழியரையும் மருத்துவமனை பணிப்பாளரும் நிர்வாக அலுவலரும் நேற்று விசாரணை செய்ததில் பாதுகாப்பு ஊழியருக்கும் இத்திருட்டு முயற்சிக்கும் தொடர்பில்லையெனவும் சிற்றூழியருக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (சி)

# நவம்பர் ஊதியம்

காங்கேசன் சீமெந்து கூட்டுத் தாபன ஊழியர்களின் நவம்பர் மாதத்திற்குரிய சம்பள கொடுப்பனவுகள் இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படுமென கூட்டுத் தாபன கணக்காளர் அறிவித்துள்ளார்.

வில்லை.

காஷ்மீர் மாநில தலைநகர் ஜம்மு நகரிலிருந்து 153மைல் தொலைவில் உள்ள சர்ச்சைக்குரிய பூஞ்ச் நகரில் இந்த ஏவுகணைகள் வந்து வீழ்ந்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-12-06 செவ்வாய் இரவு

08. 01 - ஊர்சுற்றும் ஒலிவாங்கி
08. 10 - அறிந்துகொள்ளுங்கள்- தகவற்களஞ்சியம்
08. 20-நலந்தானா - நிகழ்ச்சியில் எயிட்ஸ் என்னும் பயங்கர நோய் வராமல் தடுப்பதற்குவைத்தியகலாநிதிகுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்.
08. 30 - செய்திகள்
08. 40 - கருத்துக்களம் - இ. இராஜேஸ்வரன் எழுதிய ''முன்னேற்பாடு''
08. 50 - களமும் கானமும் -எஸ். லாவண்யா எழுதிய '' புரிந்துணர்வு ''
09. 00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள்யாவும் நிறைவு பெறும்.

### 1994. 12. 07 புதன் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள்கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08. 00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள்யாவும் நிறைவு பெறும்.

# காஷ்மீர் பெண்களுக்கும் தீவிரவாதிகள் பயிற்சி

(டில்லி)

காஷ்மீர் தீவிரவாதிகளும் பெண்களுக்கு போர் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். இந்தியப் படையினருக்கு எதிராக போரிடவென இப்பெண்கள் பயிற்சிக்கு உள்ளாக்கப்படுவதாக இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இராணுவப் பயிற்சியுடன் ஆயுதங்களை மறைத்து எடுத்து செல்லவும் இப்பெண்கள் பயன்படுத்தப்பட்டுவருவதாகவும் தென் காஷ்மீரிலிருந்துஇவ்வாறு பெண்கள் பயிற்சிக்காக சென்றுள்ளதாகவும்அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

# அ. தி. மு. க. அரசு மீது ஊழல் புகார்கள் வருகின்றன

## இணையமைச்சர் பைலட் கூறுகிறார்

[சென்னை]

அ. தி. மு. க. அரசு மீது ஊழல் புகார்கள்வருகின்றன. ஜனநாயகத்தை காப்பாற்ற ஊழலை எதிர்த்து போராட மக்கள் முன்வர வேண்டும். தமிழ்நாடு அரசாக இருந்தாலும் வேறு எந்த அரசாக இருந்தாலும் ஊழலையும் வன்முறையையும் எதிர்த்து மக்கள் போராட வேண்டும் என உள்துறை இணையமைச்சர் ராஜேஷ் பைலட் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் சேலத்தில் செய்தியாளர்களிடையே பேசிய அவர், காஷ்மீரில் தீவிரவாதத்தை அடக்கி ஜனநாயகத்தை நிலைநாட்ட அரசு உறுதிபூண்டுள்ளது. அங்கு துப்பாக்கி கலாசாரம் அழிந்துவருகிறது. வரவுள்ள நான்கு மாதங்களும் நெருக்கடியான காலகட்டமாகும்.

தமிழகத்தில் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வன்முறையை அடக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுக்கு அறிவுறுத்தியுள்ளேன். ஜனநாயகம் மீது நம்பிக்கை இருந்தால் பஞ்சாயத்து தேர்தலை தமிழக அரசு நடத்தவேண்டும் என்றும் ராஜேஷ் பைலட் குறிப்பிட்டார்.

# மக்களவையிலிருந்து வி.பி. சிங் ராஜினாமா

[புதுடில்லி]

முன்னாள் இந்தியப் பிரதமர் வி. பி. சிங் மக்களவை உறுப்பினர் பதவியிலிருந்து நேற்று இராஜினாமா செய்தார். நேற்றுக்காலை பாராளுமன்றம் சென்ற வி. பி சிங் மக்களவைத்தலைவரிடம் இராஜினாமா கடிதத்தை வழங்கினார்.

இவரது ஒருவரி இராஜினாமாக் கடிதத்தில் இராஜினாமாவுக்கான காரணம் எதுவும் கூறப்படவில்லை. உத்தரப் பிரதேசத்தின்தொகுதி ஒன்றிலிருந்து தெரிவான சிங்கின் பதவிக்காலம் 1996 ஜூன் மாதம் வரையுள்ளது. இவரின் இராஜினாமாவைத் தொடர்ந்து மக்களவையில் ஜனதாதள் உறுப்பினர் தொகை 24 ஆக குறைந்துள்ளது.

# ஏப்.14க்கு முன் ஒரு தொகுதி அகதிகளை சுவிஸ் அரசாங்கம் வெளியேற்ற முயற்சி

(வடமராட்சி)

சுவிஸில் தங்கியுள்ள தமிழ் அகதிகளில் ஒரு தொகுதியினரை ஏப்பிரல் 14-ம் திகதிக்குமுன் நாட்டைவிட்டு வெளியேறும்படி சுவிஸ் அரசு அறிவித்துள்ளது.

அரசியல் தஞ்சம் கோரி சுவிஸில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் அந்நாட்டு அரசு தீவிரம் காட்டி வருவதும், அரசின் இத்தகைய செயலைக் கண்டித்தும் அங்குள்ள தமிழ் அகதிகளும் பொது ஸ்தாபனங்களும் பலத்த கண்டனமும் ஆர்ப்பாட்டங்களும் நடாத்தி வருவதும் தெரிந்ததே.

தற்போது சுவிஸ் அரசு அங்கு தங்கியுள்ள தமிழ் அகதிகளில் ஒரு தொகுதியினரை ஏப்ரல் 14-ம் திகதிக்குமுன் நாட்டைவிட்டு வெளியேறும்படி கடிதம்மூலம் கேட்டுள்ளது. இது குறித்த கடிதம் அங்கிருந்து வெளியேறவேண்டியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை சுவிஸ் அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளுக்கு தொடர்பு சாதனங்களில் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

சிறிலங்காவின் புதிய அரசால் விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் என அரசு நம்பிக்கை கொண்டுள்ளதாக தமது தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் மூலம் செய்தி வெளியிட்டு வருகிறது. தொலைக்காட்சியில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் படங்களையும் கிரான்பாஸ் குண்டுவெடிப்பு தொடர்பான படங்களையும் காண்பித்து வருகிறது. (யோ)

ராஜீவ் காந்தி கொலை விசாரணை:

# மட்டக்களப்பு விவாகப் பதிவாளரை இந்தியாவிடம் ஒப்படைத்தது எவ்வாறு?

## ஐலண்ட் அரசியல் விமர்சகர் கேள்வி

(கொழும்பு)

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் குற்றவாளிகளை நாடுகடத்துவது தொடர்பான உடன்பாடு எதுவும் இன்னும் செய்து கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் மட்டக்களப்பு வந்தாறுமூலைப் பகுதியைச் சேர்ந்த விவாகப் பதிவாளரான பீதாம்பரம் சிவநாதன் நாடு கடத்தப்பட்டது எவ்வாறு? இக் கேள்வியை ஐலண்ட் இதழின் பத்தி எழுத்தாளர் ஒருவர் எழுப்பியுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே குற்றவாளிகளை பரிமாறிக் கொள்வது தொடர்பான உடன்பாடு எதுவும் செய்து கொள்ளப்பட்டிருந்தாலும் கூட ஒரு நாட்டின் நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்ட ஒருவரே நாடு கடத்தப்படுவதற்கு உரித்துடையவராவர். எனினும் இலங்கை குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்டு தற்போது இந்தியாவின் விசேட புலனாய்வு பிரிவு அதிகாரிகளின் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள பீதாம்பரம் சிவநாதன் குற்றவாளியாக கூட குறிப்பிடப்படவில்லை.

இத்துடன் அவர் சட்டத்தை மீறிய எந்தச் சம்பவத்துடனும் தொடர்பு கொண்டதாகக் கூறப்படவும் இல்லை, இந்த நிலையில் இவர் நாடு கடத்தப்பட்டுள்ளமையானது சிறிலங்காப் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் தொடர்பான கேள்விகளை எழுப்புவதாகவும் இருக்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# நாளாந்த பாண்உற்பத்திக்கு 50 ஆயிரம் கிலோ மா தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து வெதுப்பகங்களுக்கும் ஒருநாளைக்குபாண் உற்பத்தி செய்ய 50 ஆயிரம் கிலோ கிராம் மா தேவை என யாழ். மாவட்ட வெதுப்பகர் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் தற்சமயம் இயங்கும் 157 வெதுப்பகங்கள் உள்ளன. இவற்றின் பாண் உற்பத்தி செய்தலுக்கேற்ப அளவான மா வழங்கப்பட்டு வருகின்றது எனதெரிவிக்கப்பட்டது. (பா,இ)

# அரசியலமைப்பு மாற்றுவது குறித்து தொகுதி ரீதியாக கருத்துக்கணிப்பு

## யூலைக்கு முன் நடைபெறலாம் என்கிறது ஹினிகிர

(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை மாதம் சிறிலங்கா அரசியலமைப்பை மாற்றுவது பற்றி தேர்தல் தொகுதி ரீதியாக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஹினிகிர பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில், சென்ற ஜனாதிபதித் தேர்தலில் தொகுதி ரீதியாக பொதுஜன ஐக்கிய முன்னணி பெரும் வெற்றி பெற்றதால் தொகுதி அடிப்படையிலேயே சர்வஜன வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நம்பகரமாக தெரிய வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# நிவாரண விநியோகம் உடன் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களிற்கான இலவச உலர் உணவு விநியோகம் கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கிக் கொண்டிருக்கும் பொழுதே ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பொருள்கள துறைமுகத்தில் இருந்து லொறிகளில் களஞ்சியத்திற்கு வந்து கொண்டிருக்கும் பொழுதே பொருள் விநியோகத்தை மேற்கொள்ளக்கூடிய வகையில் ப.நோ.கூ. சங்கங்களிற்கு பொருள்கள் வழங்கப்படவுள்ளதென யாழ். செயலக புனர்வாழ்வுப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

# வெதுப்பகங்களில் மாவுக்குத் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பாண் உற்பத்தி செய்யும் வெதுப்பகங்கள் பெருமளவிலான மா தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ளன.

இத்தகைய நிலையினைத் தொடர்ந்து யாழ். மாவட்ட வெதுப்பக சங்கம் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியிடம் தமக்குத் தேவையான மாவைப் பெற்றுத்தருமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியிடம் தேவையான அளவு மா கையிருப்பில் இல்லாமையினால் தற்சமயம் கொழும்பில் இருந்து உருளைக் கிழங்கை ஏற்றிக் கொண்டு பருத்தித்துறையில் தரித்து நிற்கின்ற ''குமண'' கப்பலினை திருகோணமலைக்கு அனுப்பி ஒரு தொகுதி மாவை ஏற்றிவர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இம் மா வந்து சேர்ந்தாலே வெதுப்பகங்களுக்கு மா விநியோகிக்க முடியும் என மேற்படி சங்கத்தினருக்கு யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட வெதுப்பக சங்கம் தனது கையிருப்பில் இருந்த மூன்று லோட்மாவை தனது பதிவில் உள்ள 157 வெதுப்பகங்களுக்கும் தற்சமயம் வழங்கிவருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (பா)

# க.பொ.த. பரீட்சை சுமுகமாக ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் க.பொ.த(சா/தர) பரீட்சை சுமுகமான முறையில் நேற்று ஆரம்பமாகியது என யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று நடைபெற்ற தமிழ் பாடப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் பரீட்சை இணைப்பு நிலையங்களில் இருந்து பரீட்சை நிலையங்களுக்கு இதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட வாகனங்களில் எடுத்துச் செல்லப்பட்டன.

பரீட்சை முடிவடைந்ததும் பரீட்சை இணைப்பு நிலையங்களிற்கு பரீட்சை நிலையங்களில் இருந்து விடைத்தாள்கள் ஒழுங்கு செய்யப்பட்டவாறு வந்துசேர்ந்தன. என யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா),(இ)

இழுவைப் படகுகள் பற்றாக்குறை

# கப்பலிலிருந்து பொருள்கள் இறக்குவதில் தாமதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை இறங்கு துறைக்கு போதிய இழுவைப் படகுகள் இல்லாததினால் பல்வேறு பொருட்களுடன் வடக்கே வந்த கப்பல்களில் இருந்து பொருள்களை உடனுக்குடன் இறக்க முடியாமல் உள்ளது.

இத் துறைமுகத்தில் நல்ல நிலையிலற்ற மூன்று இழுவைப் படகுகளை பயன்படுத்தி தற்போது 'கோமாரி' கப்பலில் பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன. மழை காலமானதால்இதில் இரண்டு இழுவைப்படகுகளே சேவையிலீடுபடுத்த முடியும்.

தற்போது காலநிலை ஓரளவு சீராக இருந்தும் இழுவைப் படகுகள் இல்லாதநினால் மண்ணெண்ணையை ஏற்றி வந்த மாகோ கப்பல் காங்கேசன்துறையில் தரித்து நிற்கிறது. (யோ)

# பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி கொழும்பு வந்துள்ளார்

(கொழும்பு

பிரிட்டனின் இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொழும்புக்கு வருகை தந்துள்ளார். பிரிகேடியர் என். ஜே. தைலி என்பவரே இவராவார்.

இவர் சிறிலங்காவின் இராணுவத்தைச் சேர்ந்த பிரிகே

## வவுனியா

ஆகியோர் வழங்கினர்.

நீதிமன்றத்தின் முதல் வழக்காக சமூகச் சீர்கேடு தொடர்பான விசாரணை ஒன்று நீதிபதி தெ. மயூரன் அவர்களால்

# மரண அறிவித்தல்கள்

## தம்புசாமி பொன்னுசாமி

சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சித்த வைத்தியர் தம்பு

# மரண அறிவித்தல்கள்

## நரசிங்கம் செல்லத்துரை

(இளைப்பாறிய அதிபர்,
கேகாலை அ. த. க. வித்தியாலயம்)

கருகம்பனை வத்தவானப்புலத்தைச் சேர்ந்த நரசிங்கம் செல்லத்துரை நேற்று (5-12-94) காலமானார். இவர் காலஞ்சென்ற நரசிங்கம் சின்னத்தங்கம் தம்பதிகளின் மகனும், கொல்லங்கலட்டி தாமோதரம்பிள்ளை ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின்மகள் மனோன்மணியின் (இளைப்பாறிய ஆசிரியை, யா/கீரிமலை நகுலேஸ்வரா ம. வி.) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பு, இராசையா, நடராசா, திருமதி சி. செல்வம், பொன்னுத்துரை (இளைப்பாறிய கனிஷ்ட அதிபர், வீமன்காமம் ம. வித்தியாலயம்), திருமதி பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கி. சுமதி (கனடா), நாவலன் (கனடா), அகிலன், சபேசன் (யா/கோப்பாய், கிறிஸ்தவக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. நாகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், வயாவிளான் ம. ம. வித்தியாலயம்), பாலசிங்கம், சின்னத்தம்பி, திருமதி பொ. சரஸ்வதியம்மா (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி சி. செல்லமுத்து (மலேசியா), திருமதி சோ. அன்னலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், நா. கிரிதரன் (கனடா), நா. சண்முகரத்தினம் (ஆசிரியர், யா/அச்சுவேலி ம. வித்தியாலயம்)

## தம்புசாமி பொன்னுசாமி

சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட சித்த வைத்தியர் தம்புசாமி பொன்னுசாமி அவர்கள் 3-12-94இல் சிவபதம் எய்தியுள்ளார். அன்னார் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஆயுள்வேத வைத்தியர் தாமோதர ராஜகெம்பிரத்தினத்தினதும்காலஞ்சென்ற பூத்தம்பியின் அன்புத் தகப்பனும் சங்கானை காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் தம்புசாமி தம்பதிகளின் மகனும் ஆவரங்கால் வாத வைத்தியர் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை செல்லத்துரை தம்பதிகளின் மருமகனுமாவார். அன்னாரது பூதவுடல் வதிரி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரமத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு 3-12-94இல்ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்

ந. இரத்தினகோபால்
(முகாமையாளர்)

(9758)

## சிற்றம்பலம் திருச்செல்வம்

தோப்புக்காடு காரைநகரைச் சேர்ந்தவரும் தற்போது மாவடிச் சந்தி வட்டுக்கோட்டையில் வசிப்பவருமாகிய சிற்றம்பலம் திருச்செல்வம் (வெற்றிவேல்) நேற்று மாலை காலமானார். அன்னார் அமரசிங்கம், விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகசுந்தரத்தின் அன்புக் கணவரும் சந்திரசேகரம் (சுப்பிரமணியம் முன்னாள் 'சீநோர்' களஞ்சியப் பொறுப்பாளர்) விக்னேஸ்வரி, விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), விக்னராஜா (பிரான்ஸ்), யோகராணி (பிரான்ஸ்) சர்வேஸ்வரி, குணசேகரம் (நோர்வே), குணபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையாரும் தி. சிவலிங்கம் [கிராம சேவையாளர் பூநகரி), வத்சலா, விஜயலட்சுமி தேன்மொழி(பிரான்ஸ்), சௌந்தரராஜன்(பிரான்ஸ்), சண்முகநாதன் (சவூதி அரேபியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 6-12-1994 இன்று பி. ப. 2.00மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தி. சந்திரசேகரம்
[சுப்பிரமணியம்))
மகன்

மாவடிச்சந்தி,
வட்டுக்கோட்டை, (1031ɪ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### வவுனியா

ஆகியோர் வழங்கினர்.

நீதிமன்றத்தின் முதல் வழக்காக சமூகச் சீர்கேடு தொடர்பான விசாரணை ஒன்று நீதிபதி தெ. மயூரன் அவர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

### மணலாற்றில்

- கப்டன் துரையரசன்/நகுலன் (தர்மலிங்கம் அரவிந்தன், சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா)
- லெப். திலகன் (கோபாலசிங்கம் உதயகுமார், கோம்பாவில், 2-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### 350 சோடி

கவசங்களில் ஆயிரம் சோடி பெறப்படவேண்டுமென இராணுவம் விரும்பியிருந்த போதும் அவற்றின் பெறுமதியை கருத்திற்கொண்டு 350 சோடிகளுக்கே அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய கவசங்களுக்கான கேள்விப் பத்திரங்கள் இசுரேல், பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பெறப்பட்டிருந்தன. இராணுவத்தின் துப்பாக்கிசுடும் அணி ஒன்றினால் பல்வேறு ரக ரவைகள் மற்றும் வெடிமருந்துகள் என்பவற்றிற்கு ஊடாக இக்கவசங்கள் பரிசோதிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து அமெரிக்க தயாரிப்புக்கள் தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இவை வெகு விரைவில் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பல இராணுவ

ருகிறது

கடந்த ஐ தே. கட்சி அரசாங்கத்தின் காலத்தில் நடைபெற்ற ஆயுதக்கொள்வனவும் அது தொடர்பாக பெறப்பட்ட தரகுப்பண மோசடிகளுமே இவ்வாறான எதிர்ப்புணர்வுள்ளவர்களை வலுப்படுத்தியுள்ளதாக மேலும் தெரியவருகிறது. (இ/பா)

## கொழும்பு வந்துள்ளார்

(கொழும்பு

பிரிட்டனின் இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொழும்புக்கு வருகை தந்துள்ளார். பிரிகேடியர் என். ஜே. தைலி என்பவரே இவராவார்.

இவர் சிறிலங்காவின் இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் எச். ஜே. றொட்றிக்கோவுடன் கண்டிக்கு சென்றுள்ளார். பிரிட்டன் இராணுவ அதிகாரியின் கொழும்பு விஜயத்திற்கான காரணம் எதுவும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கோமாரியிலும் சீனி வந்தது

பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'கோமாரி' கப்பலில் மேலும் சீனி எடுத்து வரப்பட்டுள்ளது. இக்கப்பலில் அரச அதிபரின் பெயரில் 896 மெற்றிக் தொன் சீனி வந்துள்ளது. தனியாருக்கும் வந்துள்ளது.

### இராணுவ

பிளான், நல்லூர், பண்டத்தரிப்பு, சுன்னாகம், உடுப்பிட்டி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளிலுள்ள தேர்தல்வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு நடந்ததாக கூறப்பட்டு, வாக்குச் சீட்டுக்கள் பலாலி இராணுவ முகாமில் வைத்தே வாக்குப் பெட்டிகளில் போடப்பட்டிருந்ததாகவும் இச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் உப செயலாளர்களில் ஒருவரான டாக்டர் ஜெயலத் பெர்ணாண்டோவும் பலாலி இராணுவ முகாமிலேயே தங்கியிருந்ததாகவும் ராவயமேலும் தெரிவித்துள்ளது.

### தலைமையகத்தில்

இவர்களைத்தவிர கேணல்கள், மேஜர்கள், கப்டன்கள், லெப். கேணல்கள் எனப் பல அதிகாரிகள் கட்டாய ஓய்வில் செல்லும்படி கேட்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

### தாக்குதல்

மானிக்கப்பட்டிருக்காத போதும் அகதிகளுக்கான ஐ. நாவின் உயர்ஸ்தானிகராலயம் போன்ற நிறுவனங்களால் இது கண்காணிக்கப்பட வேண்டும் என அரசாங்கம் விரும்புகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

### ஆயரின்

யாழ் ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் அவர்கள் தெரிவித்துள்ளார்

நேற்று கிளிநொச்சியில் வைத்து எமது செய்தியாளருக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறுகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு கடிதம் மூலமும் பூநகரிப் பாதையை திறக்குமாறு கேட்டிருந்தேன் அதற்கும் இதுவரை பதில் கிடைக்கவில்லை எவ்வளவுதான் எம்மாலும் செய்ய முடியும்? நாமும் சிறுபான்மையினரே பெரும்பான்மையினரல்ல எப்படியிருப்பினும் நல்லெண்ணம் இருப்பின் அரசாங்கத்தால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனத் தெரிவித்தார்.

### புதிய

தில் பாரபட்சம் நிலவுவதாகவும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் ஜனாதிபதியினால் அழைக்கப்பட்டு இக் கேள்வி அறிவித்தல் தொடர்பாக விளக்கம் கோரப்பட்டுள்ளது.

கடந்த புதனன்று விமானப் படைத் தளபதி ஏயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க அலரி மாளிகைக்கு விரைந்து விமானப்படையின் தேவைகள் மற்றும் அவசியங்கள் என்பன குறித்து ஜனாதிபதிக்கு விளக்கம் அறிவித்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. நாகரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், வயாவிளான் ம. ம. வித்தியாலயம்), பாலசிங்கம், சின்னத்தம்பி, திருமதி பொ. சரஸ்வதியம்மா (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி சி. செல்லமுத்து (மலேசியா), திருமதி சோ. அன்னலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், நா. கிரிதரன் (கனடா), நா. சண்முகரத்தினம் (ஆசிரியர், யா/அச்சுவேலி ம. வித்தியாலயம்), நா. அருந்தவரத்தினம், சி. ராதாகிருஷ்ணன் (பிரான்ஸ்), சி. லலிதாம்பிகை, சி. நகுலாசலபதி (பிரான்ஸ்), பா. சசிகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், கி. தர்ஷசன் (கனடா), கி. மதுஷன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று (06-12-94) முற்பகல் 10 மணிக்கு இருபாலை கிழக்கு சென்டா வளவிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
செ. அகிலன்
(மகன்)

சென்டா வளவு,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(10310)

## திரு. R. D. தனபாலசிங்கம்

(போடிங் மாஸ்ரர்)

திரு. R.D தனபாலசிங்கம் அவர்கள் 5- 12- 1994 நேற்று காலமானார். அன்னார் வட்டுக்கோட்டையை வசிப்பு இடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற இராசையா திரவியம் ஆகியோரின் புதல்வனும், றோஸ் அரியமலர் அவர்களின் அன்புக் கணவரும் ஜெயந்தினி (ஆசிரியை யாழ்ப்பாணக் கல்லூரி), காலஞ்சென்ற றெஜினோல்ட் அரியபாலன், டெனிஸ் அற்புதபாலன் (கனடா), ஜேம்ஸ் அமிர்தபாலன் [திட்டப் பொறுப்பாளர் - தேசிய கிறிஸ்தவ சபை], றெஜினோல்ட் அஞ்சுகபாலன் [பெற்றி-கனடா] ஆகியோரின் அருமைத் தகப்பனும் ஆவார். இவர் திருமதி நடராசா அற்புதராணி [கொழும்பு] திரு பூரண சற்குணம் (கனடா], திரு. இராஜேந்திரா [நியூசிலாந்து], திரு. செல்வேந்திரன் [இங்கிலாந்து] ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. செல்வராஜா, திருமதி நேசமலர் தேவராஜா ஆகியோரின் மைத்துனரும், திரு. மித்திர ரஞ்சன் [தென்னிந்திய திருச்சபை, அச்சக முகாமையாளர்], திருமதி டொற்றில்டா அமிர்தபாலன் ஆகியோரின் மாமனாரும், ஜோன் அஞ்சனா, ஜோகான் அஞ்சுகன், டேவிட் டில்சான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதி நல்லடக்க ஆராதனை 6-12-1994 இன்று மாலை 4. 30 மணிக்கு கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அரியமலர் தனபாலசிங்கம்
[மனைவி]

(10312]